**கடந்த பத்தாண்டுகளைப் புதிய , தனிகரற்ற ,**
**ஈடிணையற்ற சாதனைகள் மீது**
**கட்டியெழுப்பியுள்ளோம் !**

**புதிய, பெரிய, புகழ்பூத்த**
**வெற்றிகளைப் பெறுவதற்கு**
**இப்போதுள்ள இக்கட்டான நிலையை**
**இந்தியப் புரட்சி நிச்சயமாகக் கடந்து செல்லும் !**

**மாவோயிஸ்ட் கட்சியின் பத்தாண்டு நிறைவை**
**முன்னிட்டு தோழர் கணபதியுடன் ஒரு நேர்காணல்**

# மாவோயிஸ்ட் செய்தி ஏடு 2014

Maoist Information Bulletion 2014

## கடந்த பத்தாண்டுகளைப் புதிய தனிகரற்ற, ஈடிணையற்ற சாதனைகள் மீது கட்டியெழுப்பியுள்ளோம் !

## புதிய, பெரிய, புகழ்பூத்த வெற்றிகளைப் பெறுவதற்கு இக்கட்டான நிலைமையை இந்தியப் புரட்சி நிச்சயமாகக் கடந்து செல்லும் !

*ஒன்றுபட்ட கட்சி உருவாக்கப்பட்ட பத்தாமாண்டு நிறைவை முன்னிட்டு இ.பொ.க. (மாவோயிஸ்ட்) பொதுச்செயலாளர் தோழர் கணபதியிடம் மாவோயிஸ்ட் செய்தி ஏடு எடுத்த நேர்காணல்*

*மாவோயிஸ்ட் செய்தி ஏடு(மாசெஏ) : மாசெஏ-யைச் சேர்ந்த நாங்கள் கட்சியின் பத்தாமாண்டு நிறைவு விழாவுக்கு முன்னிட்டு உங்களுக்கும் நம் அனைத்து தோழர்களுக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.*

*நன்றி... எமது மையக் குழு சார்பாக மாசெஏ-யில் உள்ள அனைத்துத் தோழர்களுக்கும் புரட்சி வாழ்த்துகள்.*

*மாசெஏ: கடந்த பத்தாண்டுகளில் கட்சியினுடைய முக்கியமான சாதனைகள் என்று நீங்கள் எவற்றைக் கருதுகின்றீர்கள் ?*

*1925இல் இந்தியப் பொதுஉடைமைக் கட்சி உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து, நமது நாட்டின் புரட்சி இயக்கத்தின் வரலாறு சில மறக்கவியாத காலகட்டங்களுக்குச் சாட்சியம் கூறியுள்ளது. இவை எல்லாவற்றிலும், நக்சல்பாரி எழுச்சிக் காலத்திலிருந்து புதிய ஜனநாயகப் புரட்சிக்காக மேற்கொண்ட நீண்ட மக்கள் யுத்தத்தில் மிக முக்கியமான சில வளர்ச்சிகளின் மூலம் இந்தக் காலகட்டம் குறிப்பிடதகுந்த, தன்னிகரற்ற நிகழ்வுகளுக்கு மட்டுமல்ல, நமது நாட்டின் முழு வர்க்கப் போராட்ட வரலாற்றிலும் சில புதிய, ஈடிணையற்ற நிகழ்வுகளுக்குச் சாட்சியம் ஆகியுள்ளது.*

*கடந்த பத்தாண்டுகளில் நிகழ்ந்தவற்றில் மிக முக்கியமானவை –*

- *இந்தியாவின் புதிய ஜனநாயப் புரட்சிக்காக ஒரு ஒற்றை வழிகாட்டு மையம் நிறுவும் பணி முன்னேற்றம் கண்டுள்ளது.*
- *முன்பை விட கட்சி, படை, ஐக்கிய முன்னணி ஆகிய மூன்று மந்திரக் கோல்கள் வலிமை அடைந்துள்ளன.*
- *ஒன்றுபட்ட மாநாட்டு ஆவணங்கள், கொள்கை அறிக்கைகள், மிக முக்கியமான தீர்மானங்கள், முடிவுகள், கட்டுரைகள் முதலான ஒன்றுபட்ட கட்சியின் ஆவணங்களிலிருந்து அரசியல் வழி, இராணுவ வழி, ஐக்கிய முன்னணி கொள்கை உள்ளிட்ட பல கொள்கைகள் செறிவடைந்துள்ளன.*
- *முன்னெப்போதுமில்லாத வகையில் உண்மையான மக்கள்திரள் இயல்பைப் பெற்றுள்ள நீண்ட மக்கள் யுத்தத்தில் இராணுவ வழியில் புதிய வளர்ச்சி, கெரில்லா யுத்தம் மேற்கொள்வதில் குறிப்பிடத்தகுந்த முன்னேற்றம், பெரிய அளவில் மக்கள் பங்கேற்பு, மிகக் கொடூரமான எதிரியின் எதிர்ப்புரட்சி இராணுவ ஒடுக்குமுறை நடவடிக்கைகளினால் ஏற்பட்ட சில பின்னடைவுகளால் கிடைத்த புதிய அனுபவங்கள்.*
- *நிலம், நீர், காடு, கண்ணியம், அதிகாரம் ஆகிவற்றுக்காகப் பரந்த மக்கள்திரள் அணிதிரட்டல் மூலம், குறிப்பாக உழவர் திரள் அணிதிரட்டல் மூலம் ஏகாதிபத்தியத்தையும் நிலப்பிரபுத்துவத்தையும் அதிகாரத்துவ தரகு முதலாளியத்தையும் எதிர்த்துக் கட்டியெழுப்பட்ட மக்கள்திரள் இயக்கங்களில் கிடைத்த மிகப் பயனுள்ள புதிய அனுபவங்கள்.*
- *தொடக்க நிலையில் உள்ள புரட்சிகர மக்கள் குழு மூலம் மூலயுத்திரீதியான ஐக்கிய முன்னணியைக் கட்டியெழுப்புவதில் கிடைத்த மிகப் பயனுள்ள புதிய அனுபவங்கள்,*

செயலுத்தி ஐக்கிய முன்னணிகளில் கிடைத்த சிறந்த, புதிய அனுபவங்கள். ஆளும் வர்க்கங்களின் மக்களுக்கு எதிரான, நாட்டை விற்கும் வளர்ச்சி மாதிரிக்கு முரண்பட்டு, வெற்றிக்காரமாக மாற்று வளர்ச்சி மாதிரியை நடைமுறைத்தும் அமைப்பாக புரட்சிகர மக்கள் குழு பெற்றுள்ள வரவேற்பு.

- ஏகாதிபத்தியத்தின் ஆதரவுடன், குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆதரவுடன் இந்தியப் பாசிச அரசாங்கம் மேற்கொண்டுள்ள நாடுதழுவிய மிக மிகக் கொடூரமான ஒடுக்குமுறை இராணுவ நடவடிக்கையை எதிர்த்து நிற்கும் இந்தியப் புரட்சி, இப்போது மிக இக்கட்டான சூழல் நிலவிய போதிலும், உலக மக்கள் மத்தியிலும், இந்திய மக்கள் மத்தியிலும் உள்ள புரட்சிக்கான அனைத்து வாய்ப்புகளையும் கைகொண்டுள்ளது.
- மக்கள் யுத்தத்திற்கு ஆதரவு தெரிவித்து, பச்சை வேட்டை நடவடிக்கையை எதிர்த்து, பல்வேறுபட்ட மக்கள் பிரிவுகளிருந்து புரட்சிகர மக்கள் போரிடுவதற்குக் கிடைத்துள்ள ஆதரவு
- நமது நாட்டில் உண்மையான புரட்சியாளர்களின் ஒற்றுமையைச் சாதிப்பதில் மற்றுமொரு திருப்புமுனையாக இபொக(மா.லெ.) (நக்சல்பாரி)யும், இபொக(மாவோயிஸ்ட்)டும் ஒரே கட்சியாக ஒன்றுபட்டுள்ளது.
- இந்தியாவில் நடைபெறும் மக்கள் யுத்தத்திற்கு ஆதரவாகச் சர்வதேச ஆதரவு, ஒற்றுமை இயக்கம் கட்டியெழுப்பட்டுள்ளது. அதன் விளைவாக உலக அளவில் மாவோயிசச் சக்திகளின் ஒற்றுமை சாதிக்கும் புள்ளியாக இந்திய மக்கள் யுத்தம் பணியாற்றியுள்ளது.

இவையே, புகழ்பூத்த நக்சல்பாரி உழவர் ஆயுதப் போராட்டத்தின் விளைவாக, நமது கட்சியின் மாபெரும் நிறுவனத் தலைவர்கள் சாரு மஜும்தார், கனாய் சட்டார்ஜி ஆகியோரின் தலைமையால் வழிநடத்தப்பட்டு எழுந்துள்ள புதிய கருத்துநிலை, புதிய அரசியல், புதிய வழி, புதிய கட்சி, புதிய இராணுவம், புதிய மக்கள் முன்னணி ஆகியவற்றின் அடிப்படையில் கடந்த பத்தாண்டுகளில் அடையப்பட்டுள்ள புதிய முக்கியமான சாதனைகள் ஆகும். கடந்த பத்தாண்டுகளின் இந்த எல்லா வளர்ச்சிகளும் ஒருபுறம் எதிரியின் தொடர்ச்சியான, மிகக் கொடூரமான இராணுவ ஒடுக்குமுறைகளை எதிர்த்துச் சண்டையிட்டதற்கு மத்தியிலும், சண்டையிட்டு அவ் ஒடுக்குமுறைகளைப் பின்னடையச் செய்ததன் மூலமும், மற்றொரு புறம் இடது, வலது சந்தர்ப்பவாதங்களை எதிர்த்தும், இயக்கத்தின் பல்வேறு வட்டாரங்களில் கட்சிக்குள் இருந்த சந்தர்ப்பவாதத் தலைமையை எதிர்த்தும் நடத்திய கசப்பான உட்கட்சிப் போராட்டங்களுக்கு மத்தியிலும் சாதிக்கப்பட்டன.

நமது நாட்டின் விடுதலைக்காக மக்கள்திரளினரும் பொதுஉடைமையாளர்களும் கிர்த்தி மிக்க தியாகங்களைப் புரிந்த இந்திய புரட்சி இயக்கத்தின் தருணங்களில் இக்காலகட்டமும் ஒன்று ஆகும். கடந்த பத்தாண்டுகளின் முக்கிய புதிய வெற்றிகள் எல்லாம் இந்தத் தியாகங்கள் இல்லையேல் இல்லை. மக்கள் மத்தியில் ஆளும் வர்க்கங்கள் வித்தைத்துள்ள அழுகிய, சீர்கேடுற்ற, தன்னை மையப்படுத்திய சிந்தனைக்கும் பண்பாட்டிற்கும் எதிராக, இந்தத் தியாகங்கள் வழியாக உயர்ந்த மனித மதிப்புகளைக் கொண்டிலங்கும் மாற்றுச் சிந்தனைமுறையை, பண்பாட்டைக் கட்சி முன்னோக்கி வளர்த்துச் சென்றுள்ளது. இந்த வகையில், இந்தத் தியாகங்களைப் புரட்சிகர மாற்றத்திற்காகச் சண்டையிடும் சமூகத்தின் ஒடுக்கப்பட்ட வர்க்கங்கள், பின்தங்கிய பிரிவினர் தமதாக்கிக் கொள்வார்கள்.

மாசெஏ: இப்போது கட்சி முகம் கொடுக்கும் மிக முக்கிய சாவல்கள் எவை ? அவற்றை வெற்றிக் கொள்வதற்கு உள்ள வாய்ப்புகள் என எவற்றைப் பார்க்கின்றீர்கள் ?

இப்போது எமது இயக்கம் முகம்கொடுக்கும் முதன்மையான சாவல்கள் பின்வருபவை:

- முதலாவது சாவல், எமது அகநிலை ஆற்றல்களை, குறிப்பாகக் கட்சியின் மூலயுத்திரீதியான தலைமையைப் பாதுகாத்துத் தக்கவைத்தல் ஆகும். புதிய கட்சி உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து, மையக் குழு தொடங்கி, கிராமக் கட்சிக் கிளைகள் வரை எல்லா மட்டங்களிலும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான கட்சித் தலைவர்களை இழந்துள்ளோம். ஆகவே, எதிரியின் தாக்குதல்களிருந்து கட்சியின் அகநிலை ஆற்றல்களைப் பாதுகாத்துத் தக்கவைத்தலைக் கட்சியின் முன்னுள்ள மிக முக்கிய பணிகளில் ஒன்றாகக் கருதுகின்றோம். அகநிலை ஆற்றல்களைத் தக்கவைத்துக் கொள்தலின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டு, நாம் செயல்பாட்டின் முறையான இரகசிய முறைகளைப் பின்பற்ற

வேண்டும்; நமது நடைமுறையிலிருந்து கிடைக்கும் படிப்பினைகளைக் கற்றுக்கொண்டு, அதை உறுதியாக நடைமுறைப்படுத்தி, நடைமுறையில் உள்ள நமது தவறுகளைச் சரி செய்துகொள்ள வேண்டும்; புரட்சி வெற்றி அடைவதற்கான முன்நிபந்தனை தலைமைத் தொடர்ச்சியுடன் கூடிய வலிமையான கட்சி பற்றிய முழு கட்சியினதும் உணர்நிலையை உயரச் செய்து புதிய தலைமையை தயார் செய்ய வேண்டும்.

- இராண்டாவது சவால், புரட்சி இயக்கம் சமவெளிக் கிராமப் பகுதிகளிலும் நகர்ப் பகுதிகளிலும் பலவீனமாக உள்ளது. இது இன்று கட்சி சந்தித்துக் கொண்டுள்ள இக்கட்டான நிலைக்கு இட்டுச்செல்லும் காரணிகளில் ஒன்று. இப்போதைய எமது கட்சி நீண்ட காலம் பலவீனமாய் இருந்த பகுதிகளில் இயக்கத்தைப் புதுப்பிப்பதற்கும் விரிவாக்குவதற்கும் நம் முன் உள்ள சவால் இது. ஏனென்றால், மக்கள் யுத்தத்தின் களத்தை விரிவுப்படுத்துவதில் புதிய போர் முன்னணிகளைத் திறக்கப் புதிய பகுதிகளில் இயக்கத்தை விரிவுபடுத்த வேண்டிய தேவை நமக்கு உள்ளது. எமது இயக்கத்தின் சிறந்த அனுபவங்களின் ஒளியில், செய்த தவறுகளையே திரும்பச் செய்யாமல், புரட்சியை முன்னேற்றுவதற்காக வளர்ந்து வரும் சாதகமான சூழலைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த வழியில், இப்போதுள்ள இக்கட்டான நிலைமையை வெற்றிக் கொண்டு, உறுதியாக இயக்கத்தை முன்கொண்டு செல்வோம்.
- மூன்றாவதாக, சமூகப் பொருளாதார நிலைமைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களால் இந்தியா முதலாளிய நாடாக மாறிவிட்டது என்று வலியுறுத்துவதன் மூலம் புரட்சி முகாமில் சிலர் குழப்பத்தை விளைவிக்க முயலுகின்றனர். அவர்கள் நீண்ட மக்கள் யுத்த வழியைக் காலத்துக்கு ஒவ்வாத ஒன்று என்ற தவறான பார்வையையும் முன்மொழிகின்றனர். ஆனால், இந்தியா போன்ற அரை காலனிய அரை நிலப்பிரபுத்துவ நாடுகளில் புதிய ஜனநாயகப் புரட்சியின் வெற்றிக்கான சரியான புரட்சிப் பாதை நீண்ட மக்கள் யுத்தப் பாதையே என்று நடைமுறையில் நிரூப்பிக்கப்பட்டுள்ளது. ஆகவே, தவறான பார்வைகளை எதிர்த்து, அவற்றை அம்பலப்படுத்தி, நாம் உறுதியோடு நிற்க வேண்டும். அதே வேளையில் , பொருளாதார, அரசியல், சமூக, பண்பாட்டு மாற்றங்களை ஆழமாகப் பயின்று, எமது செயலுத்திகளில் முறையான மாற்றங்களைச் செய்ய வேண்டும்.
- நன்காவதாக, இந்து பாசிசச் சக்திகள் நிலப்பிரபுத்துவ கருத்துநிலை, அரசியல், பண்பாடு ஆகியவற்றையும் எதிர்ப்புரட்சி ஆற்றல்களையும் மேலும் வலிமைப்படுத்தி, மத்தியில் ஆட்சிக்கு வந்துள்ளனர். சர்வதேச நிதி மூலதன, இந்தியத் தரகு அதிகார முதலாளிகள் ஆதவு பெற்ற மோடி தலைமையிலான பா.ஜ.க., சில இடங்களில் சங்க் பரிவார் தோற்றுவித்த மதக் கலவரங்களின் மூலம் குழப்பம் ஏற்படுத்தி ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. ஆட்சிக்கு வந்த பிறகு, அந்நிய, இந்தியப் பெருமுதலாளிகளுக்கும் பெருநிலப்பிரபுகளுக்கும் மிகத் துரித கதியில் சேவையாற்றும் பொருட்டு, ஏகாதிபத்தியத்திற்கு ஆதரவான நாட்டை விற்கும் கொள்கைகளை மென்மேலும் அமல்படுத்தி வருகின்றது. அந்தக் காரணத்திற்காக ஒரே வேளையில் பல புதிய வடிவங்களில் இந்து பாசிச நிகழ்நிரலை முன்கொண்டும் செல்கிறது. இது போராட்டத்தில் எல்லா ஜனநாயக, முற்போக்கு, சமயச் சர்பற்ற, நாட்டுப்பற்றுக் கொண்டு ஆற்றல்கள் ஒன்றிணைவதற்கான வாய்ப்பை வழங்குகிறது. சமூகத்தின் புதிதான, அதிகமான எண்ணற்ற வர்க்கங்கள், மக்கள் பிரிவுகள், ஆற்றல்கள் போராட்டக் களங்களில் குதிக்கப் போகின்றார்கள். இது நீண்ட மக்கள் யுத்தம் முன்னேறுவதற்கான புதிய வாய்ப்புகளைத் திறந்து விடும்.
- ஐந்தாவதாக, உலகப் புறச் சூழல் மென்மேலும் புரட்சிக்குச் சாதகமானதாக மாறி வருகின்றது. ஏகாதிபத்திய உலகப் பொருளாதாரம் அழமான நெருக்கடியின் கீழ் சூழன்று கொண்டுள்ளது, உலகின் எல்லா அடிப்படை முரண்பாடுகளும் கூர்மையடைந்து உள்ளன. இதன் விளைவாக, உலகம் முழுவதும் உள்ள புரட்சிகர, ஜனநாயக, தேசிய விடுதலை ஆற்றல்கள் ஏகாதிபத்தியத்தையும் அதன் உள்ளூர் அடிவருடிகளையும் எதிர்த்து வலிமை பெற்று உள்ளனர். மாவோயிச ஆற்றல்கள் மேலும் ஒருங்கிணைந்து வலுவடைந்துள்ளனர். அதே வேளையில் சோசலிச முகாம் எதுவுமில்லை. சர்வதேசப் பொதுஉடைமை இயக்கத்தின் அகநிலைச் சக்திகள் இப்போது மிகவும் பலவீனமான நிலையில் உள்ளன.

இவையே இப்போது எம் முன் உள்ள குறிப்பிடத்தகுந்த சவால்கள் ஆகும்.

மாசெஏ: கட்சியும் மவிகெபவும் ஒன்றிணைந்த பிறகு, மவிகெப-வின் வளர்ச்சியிலும் கெரில்லாப் போர் விரிவாக்கத்திலும் செயல்திறன் செறிவு அடைவதிலும் ஒரு பண்பளவிலான மாற்றம்

*ஏற்பட்டதை நாங்கள் கண்டோம். ஆனால், இதில் இப்போது தொய்வடைந்துள்ளது எனத் தோன்றுகிறது. திரும்பவும் வேகமாக முன்னேறிப் பாய்வதற்கு கட்சி எவ்வாறு திட்டமிடுகிறது ?*

*உங்கள் கருத்து சரியானது. கடந்த பத்தாண்டுகளில் சில மிக அபூர்வமான வெற்றிகளைப் பெற்றோம். 2011 தொடங்கி நாம் உணரத் தொடங்கிய, தொய்வடைந்து வருகிறோம் என்ற உங்கள் கருத்தும் சரியானதுதான். அது பற்றி மையக்குழு 2013இல் நிலைமையைப் பகுப்பாய்வு செய்தது. மிகவும் இக்கட்டான நிலைமைக்கு எமது இயக்கம் முகம்கொடுக்கிறது என்று மதிப்பிட்டோம். ஆனால் வேறுபட்ட கெரில்லா மண்டலங்களில் வேறுபட்ட அளவுகளில் இடர்நிலையில் உள்ளோம். கடந்த பத்தாண்டுகளில், எமது வேறுபட்ட கெரில்லா மண்டலங்களில் தொடர்ச்சியான பலவீனம் நிலவியதிலும், வளர்ச்சியடைந்ததிலும் ஒரு சமச்சிரற்றத் தன்மை நிலவுகிறது. எமது நாட்டில் பொருளாதார, சமூக, அரசியல் நிலைமைகளிலும் சமச்சீரற்றத் தன்மை நிலவுவதால், வேறுபட்ட கெரில்லா மண்டங்களுக்கு இடையில் மட்டுமல்ல, நாடு தழுவிய புரட்சிகர இயக்கம் முழுவதிலும் சமச்சீரற்ற தன்மை நிலவுகிறது. இது நீண்ட மக்கள் யுத்தப் பாதையின் ஒரு விதி. சந்தேகத்திற்கு இடமில்லாமல், தடைகளைப் பொருட்டுப் படுத்தாமல், எமது அகநிலை முன்முயற்சிகளே கெரில்லா யுத்தத்தை முன்னேற்றுகிறது. ஆகவேதாம், வேறுபட்ட பொருளாதார, சமூக, அரசியல், வரலாற்று, புவியியல் நிலைமைகள் நிலவும் வேறுபட்ட கெரில்லா மண்டலங்களில் கெரில்லா யுத்தம் முன்னேற்றம் அடைந்துள்ளது. மேலும் இந்த நிலைமைகள் கெரில்லா போரில் நல்வாய்ப்புகள், கெடுவாய்ப்புகள் ஆகியவற்றிற்கான அடிப்படைகளாகவும் அமைவுறுகின்றன. ஆகவே இந்த எதார்த்தத்தைப் புறக்கணிக்கக் கூடாது.*

*2011இலிருந்து, இராணுவ முன்னணியிலும், மக்கள் திரள் போராட்டங்களைக் கட்டியெழுப்புவதிலும், இயக்கத்தை விரிவாக்குவதிலும் சில மாநிலங்களில் / கெரில்லா மண்டலங்களில் குறிப்பிடத்தக்க சாதனைகளைப் பெற்றுள்ளோம். குவிமையப் புள்ளியான புரட்சிகர மக்கள் குழு(மக்கள் அரசு)வை கட்டியமைப்பதன் மூலமும், கட்சி வலுவாக்குதலின் மூலமும் இந்தக் காலத்தில் சில கெரில்லா மண்டலங்களில் இயக்கம் வளர்ச்சி அடைந்துள்ளது. ஆயினும் தொய்வடைதலை எதிர்கொண்டுள்ளோம். இந்தத் தொய்வடைதலுக்கான காரணங்களைக் கட்சி அடையாளம் கண்டுள்ளது. இந்த நிலைமையை வெற்றிக் கொள்வதற்கு முழு கட்சியும், மவிகெப-வும், மக்கள்திரள் அமைப்புகளும் முடக்கிவிடப் பட்டுள்ளன. இவ்விசயம் நேர்மறை அம்சமாக விளங்குகிறது. 2011 இல் பச்சை வேட்டையின் இராண்டாம் சுற்றும் ஆரம்பிக்கப்பட்டது. மோடி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி (தேஜகூ) ஆட்சிக்கு வந்தவுடன் பச்சை வேட்டையின் மூன்றாம் சுற்று தொடங்கப்பட்டுள்ளது. ஆகவே, இவையெல்லாம் பல ராணுவத் தாக்குதல்களுக்கு மத்தியிலும், அவற்றைத் தோற்கடிக்கச் சண்டையிட்டதன் மூலமும் செய்யப்பட்டுள்ளன என்பதை மனதில் கொள்ள வேண்டும். நிலம், நீர், காடு, கண்ணியம், அதிகாரம் ஆகியவற்றுக்காக மக்களின் போராட்டத்துக்கு ஆதவு தெரிவித்தும், குரல் கொடுத்தும், பச்சை வேட்டையைக் கடுமையாக எதிர்த்தும் முன்சென்றதில் சமூகத்தின் ஜனநாயக, நாட்டுப் பற்றுக் கொண்ட பிரிவினர் முக்கிய பங்காற்றியதற்கு எமது கட்சி நன்றி பாராட்டுகிறது; அச்செயல்பாடுகளை முழுமனதோடு வரவேற்கிறது. இவையும் மக்களின் போரிடும் உயிர்ப்பாற்றலை வலுவாக்குவதில் பங்குசெலுத்தின.*

*2009 மத்தியிலிருந்து எதிர்ப்புரட்சிகரப் போரைத் தோற்கடிப்பதற்கான சண்டையில், மிகப் பரந்ததாய் விளங்கிய எதிர்ப்புரட்சிகர ஆற்றலின் நிலையிலிருந்து புரட்சிகர ஆற்றல் வலிமையில் மாறுபட்டு இருந்தது. எதிரியின் பிளாட்டுன் அளவிலான படையை அழிக்க, கம்பெனி அளவிலான கெரில்லாப் படைகளே சண்டையிட்டன. பட்டாலியன் அளவிலான கெரில்லாப் படைகளே கம்பெனி அளவிலான எதிரிப் படைகளைத் துடைத்தழித்தன. இந்த நிலைமையில், எல்லா கெரில்லா மண்டலத்திலும் பத்து ஆயிரத்திலிருந்து ஒரு இலட்சம் வரையிலான படைகளை எதிரி அணிவகுத்து நிறுத்தியுள்ளான். ஆக, எதிர்தரப்புப் படைகளின் வலிமைக்கும் நமக்கும் உள்ள வேறுபாடு, நாம் மேற்கொண்டுள்ள கெரில்லா யுத்தத்தில் புதிய சாதகமற்ற சூழ்நிலைமையாக எழுந்துள்ளது. எதிரிப் படைகளின் மிகப் பெரும் அணிவகுப்பு எமது ஆயுதப் போராட்டத்தை மட்டுமல்ல, மக்கள் திரள் இயக்கங்களையும் ஒடுக்குவதற்கு ஆகும். இதற்குக் கடந்த பத்தாண்டுகளில் நடந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க நந்திகிராம், லால்கர், நாராயண்பட்னா மக்கள் திரள் இயக்கங்களும், எல்லா கெரில்லா மண்டலங்களிலும் நடந்த பெரும்பாலான பல இயக்கங்களும் சாட்சியங்கள் ஆகும். ஆகவே, அழுகிப்போன இந்த அமைப்புக்கு மாற்றாக மாவோயிஸ்ட் இயக்கம் எழுந்துள்ளது.*

*எதிரியின் ஒடுக்குமுறையின் விளைவாக மட்டுமே தொய்வடைவதல் ஏற்படவில்லை. எமது அகநிலைப் பலவீனங்களின் விளைவாலும் தொய்வு ஏற்பட்டது. இந்த நிலையை வந்தடைந்தற்கு*

*காரணமான எமது தவறுகளையும் பலவீனங்களையும் அடையாளம் கண்டுள்ளோம். கட்சியையும் மவிகெப-வையும் மக்கள்திரள் அமைப்புகளையும் போல்ஷ்விக்மயமாக்க முனைந்துள்ளோம். அதே நேரத்தில், இந்த நிலைமைக்கு சில புறச் சூழ்நிலைமைகளும் இட்டுச் சென்றுள்ளன என்றும் பார்க்கின்றோம். சில வெற்றிகள் பெற்று, தொடக்கநிலையில் இருந்த போது, எதிரியின் ஒடுக்குமுறை நடவடிக்கைகளைத் தோற்கடிக்கப் பல செயலுத்திகளைக் கைகொண்டோம். இவை எதிரி சில எதிர்ச்செயலுத்திகளை வகுத்துக் கொள்ள வழிகாட்டியுள்ளன. இதனால் புதிய சூழல் எழுந்துள்ளது. ஆகவே, மக்களைத் திரட்டி, கெரில்லா யுத்தத்தின் மூலமாக எதிரியின் மேலதிக படைகளை எதிர்த்து திரும்பவும் நமக்கு வெற்றிகளைத் தரும் செயலுத்திகளைக் கைகொள்ள வேண்டும். நாம் மக்கள் தளத்தில் ஆழமாக ஊன்றி நின்று கெரில்லா யுத்தத்தை வளர்த்துக் கட்டியெழுப்ப வேண்டும் என்பது மறுக்கமுடியாத உண்மை ஆகும்.*

*இயக்கத்தின் ஏற்றம் இறக்கம் அவப்போது எழும் புதிய சூழல்களால் ஏற்படுகிறது. அவற்றைப் புரிந்துகொள்ள வேண்டும். அவற்றுக்காகக் கட்சியையும் மவிகெப-வையும் மக்களையும் தயார்படுத்த வேண்டும், கட்சியிடம் சில மிக மோசமான தவறுகள் நீடிக்கின்றன. கட்சியில் மிகக் குறுகிய காலத்திற்குள், புதிய சவால்களை எதிர்கொண்டதால் இழப்புகள் அதிகரித்துள்ளன நீண்ட மக்கள் யுத்த வழியில் வலிமையான எதிரியைத் தோற்கடிக்கச் சண்டையிடும்போது, இழப்புகளும் பின்னடைவுகளும் ஏற்படும். வெற்றி-தோல்வி-வெற்றி-தோல்வி-இறுதி வெற்றி என்ற வளர்ச்சிப் போக்கிலேயே நீண்ட மக்கள் யுத்தம் முன்னேறும் என்று மாவோ கூறியுள்ளார். நீண்ட மக்கள் யுத்தப் பாதை எப்போதும் சிக்கலான வளர்ச்சிப்போக்கில் வளர்ந்துசெல்லும். ஒரே வேளையில் நீண்ட மக்கள் யுத்தம் பல சிறிய, பகுதி அளவிலான வெற்றிகள் கிடைத்து, பின்னர் ஒரு பெரிய வெற்றியின் மூலம் பாய்ந்து செல்லும். இல்லையென்றால் பல சிறிய, பகுதி அளவிலான தோல்விகள், இழப்புகள் அடைந்து, மிகப் பெரிய இழப்புகள், பின்னடைவுகள் ஏற்படும். ஏற்ற இறக்கமான வகையில் முன்னேற்றம் அடைவது நீண்ட மக்கள் யுத்தத்தின் விதி ஆகும். ஆகவே இந்த நோக்குடன் கெரில்லா யுத்தத்தில் தொய்வு அடைதலை நாம் பார்க்க வேண்டும்.*

*இந்த அர்த்தத்தில் செயலுத்திகளைக் கைகொள்வது அவசியம். எமது நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள இயக்கத்தின் சமச்சீரற்ற வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, நாம் பணியும்புரியும் பகுதியில் துல்லியமான சூழ்நிலைமை மாற்றங்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, தற்காப்புச் செயலுத்திகளையோ தாக்குதல் செயலுத்திகளையோ நாம் கைகொள்கிறோம். இப்போதைய இக்கட்டான நிலைமையை வெற்றிக் கொள்ளும் நோக்கத்துடன், இப்போதைய நிலையில் கெரில்லா யுத்தத்தில் முழுதளாவிய மாற்றத்தின் அளவு குறிப்பிட்ட பகுதி அளவிலானதாக இருக்கும். வேறுபட்ட பகுதிகளில் மட்டுமல்ல, ஒரு தனி கெரில்லா மண்டலத்திற்கு உள்ளும்கூட, வட்டாரத்தின்/ மண்டலத்தின் குறிப்பான தனித்தன்மைகளுக்கு ஏற்ப தாக்குதல் அல்லது தற்காப்புச் செயலுத்திகளை மேற்கொள்ள வேண்டும். சில பகுதிலளில் சூழல் நன்றாக இருக்கும் பட்சத்தில், முழுமையாக இக்கட்டான நிலைமையை எதிர்கொண்டிருந்தால், அந்நிலைமை வெற்றிக் கொள்ளும் பொருட்டு, அப்பகுதியைத் துணைகொள்ள வேண்டும். தாக்குதல் இல்லாத தற்காப்பு இல்லை. ஆகவே எப்போதும் தாற்காப்பு தாக்குதலையும் உள்ளடக்கியுள்ளது என்பது நம் எல்லோருக்கும் தெரியும். ஆனால் நம் அகநிலை ஆற்றல்களைப் பேணிக் கொள்ளவே எல்லா வகையான செயலுத்திகளையும் கைகொள்கிறோம். குறிப்பாக எல்லா மட்டங்களில் இருக்கும் தலைமையைப் பேணிப் பாதுகாத்துக் கொள்ளுதல் மிகவும் முக்கியம்.*

*புதிய சூழலுக்கு ஏற்ப எம்மைத் தயார்படுத்திக் கொள்வதில் எமது கட்சியில் இரண்டு விகல்கள் ஏற்பட்டன. 1.எதிரியின் ஒடுக்குமுறையின் கடுமையினால் அவனின் பலவீனமான கூறுகளைக் காணாமல், எதிரியின் வல்லமை நிறைந்த தோற்றத்தை மட்டுமே நோக்கினோம்; எமது வலிமையையும் வளர்ச்சியையும் புரட்சி யுத்தத்தில் மக்களின் வரலாற்றுப் பாத்திரத்தையும் பார்க்கவில்லை. மூலயுத்திரீதியாக எதிரியைப் புரிந்துகொள்ளவில்லை, செயலுத்தி அளவிலேயே பார்த்தோம். இது தற்காப்பு என்ற பெயரில் செயலற்ற நிலைக்குச் சென்று, இறுதியாக சண்டையிடும் உணர்வை இழக்கச் செய்து தோழர்கள் செயல்திறன் இழப்பதற்கு இட்டுச் சென்றது. இது வலது விலகல். 2. கெரில்லா யுத்தத்தில் சண்டையிடும் தரப்புகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் புரிந்து கொள்ளாமல், எமது அகநிலை வலிமையின் சார்பு அளவிலான அல்லது பெரிய அளவிலான பலவீனத்தைக் கவனத்தில் கொள்ளாமல், மக்களைச் முனைப்பற்றவர்களாக்கி விட்டு, தாற்காப்பிற்கு முக்கியத்துவம் கொடுக்காமல், தாக்குதல் செயலுத்திகளைக் கைகொள்ள முயலுதல். இப்படி செய்பவர்கள் செயலுத்திரீதியாக எதிரியைப் பார்ப்பதில்லை, மூலயுத்தி நோக்கில் மட்டும் மதிப்பிடுகின்றனர். இது இடது விலகல்.*

*ஆகவே, நமது, எதிரி ஆகிய இரு தரப்புகளில் உள்ள பலவீனங்களையும் பலங்களையும் புரட்சிகர யுத்தத்தில் ஏற்பட்டுள்ள புதிய மாற்றங்களையும் ஆராய்ந்து, நாட்டில் ஏற்பட்டுள்ள*

*முழுமையான சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டு மாற்றங்களைப் பயின்று, எமது கெரில்லா யுத்தமுறை பாய்ந்து செல்வதற்கான காரணிகளை முடக்கிவிடவேண்டும். எமது போல்ஷ்விக் மயமாக்கத்தின் வழியாக அடைவதற்கு உரிய முக்கிய அம்சங்களில் ஒன்றாக இதை நாங்கள் பார்க்கின்றோம். திரும்பவும் முன்னேறிச் செல்வதற்கு, மக்கள் திரளை ஒன்றுதிரட்டுவதின் வழியாக மக்கள் திரள் தளத்தைப் பெரிதுபடுத்துவது, கெரில்லா யுத்த நடைமுறையில், மக்கள் யுத்தத்தில் அவர்களின் செயலூக்கமான பங்களிப்பை அதிகப்படுத்துவது எல்லாவற்றிலும் மிக முக்கியமானது ஆகும். இந்தப் புரிதலுடன் மையக் குழுவும் மைய இராணுவக் குழுவும் எல்லா வழிகாட்டும் குழுக்களும் இப்போதைய நிலைமையை எதிர்த்துப் போராடுகின்றன.*

*மாசெஏ: கட்சியின் முதன்மையான செயல்பாடுகள் பழங்குடி பகுதிகளோடு முடங்கியுள்ளன என்று கட்சியின் ஆதரவாளர்கள் பலர் கவலையுறுகின்றனர். சிலர் நீண்ட மக்கள் யுத்த பாதை முழு இந்தியாவிற்கும் ஏற்றது அல்ல, ஒரு சில பகுதிகளுக்கு மாத்திரம் பொருத்தமானது என்று வாதிடுகின்றனர். இதற்கு உங்கள் பதில் என்ன ? நாடு முழுவதும் மக்கள் யுத்தத்தை எவ்வாறு பரப்புவீர்கள் ?*

*இந்தியா சமச்சீரற்ற பொருளாதார, அரசியல், சமூக வளர்ச்சியை உடைய, பெரிய அரை காலனிய அரை நிலபிரபுத்துவ நாடு. இந்தச் சமச்சீரற்றத் தன்மை விதிகள் நாடு தழுவிய புரட்சி எழுச்சிக்கு அல்லது ஆயுதம் தாங்கிய எதிர்ப்பு எழுச்சிக்கு வழி இல்லை எனக் காட்டுகின்றன. நாட்டுப்புறத்தின் பின்தங்கிய, மூலயுத்திரீதியான பகுதிகள் மீது எமது தளங்களை அமைக்க வேண்டும். ஒப்பிட்டு அளவில் மிகவும் பின்தங்கியுள்ள, சமூக முரண்பாடுகள் கூர்மையடைந்துள்ள பகுதிகளில் புரட்சிகர யுத்தம் நீண்ட காலம் நடக்கும். ஆகவே, புரட்சி இயக்கம் முன்னேறுவதற்கான ஓரே வழி நீண்ட மக்கள் யுத்த பாதை. மேலும், ஆளும் வர்க்கங்கள் நன்கு பயிற்றுவிக்கப்பட்ட, நன்கு நிபுணத்துவம் பெற்ற நவீன இராணுவத்துடன் மையப்படுத்தப்பட்ட அதிகாரம் மிக்க அரசு வடிவத்தில், அவர்கள் கரங்களில் வலிமையான ஒடுக்குமுறை பொறியமைவைப் பெற்றுள்ளனர். ஆகவே எதிரி ஆட்சியின் பலவீனமான கண்ணியில், எடுத்துக்காட்டாக நாட்டுப்புறத்தில் புரட்சிகரப் போரைத் தொடங்க வேண்டும். சந்தேகத்திற்கு இடமற்று அரை காலனிய அரை நிலப்பிரபுத்துவ நாடுகளில் நீண்ட மக்கள் யுத்தப் பாதையின் சரியான தன்மை சீன, வியாட்நாம், லாவோஸ், கம்போடியா முதலானவற்றில் நடந்த புரட்சிகளின் வரலாறும் எமது சொந்த அனுபவமும் நிரூபிக்கின்றன.*

*செஞ்சேனை விடுவிக்கப்பட்ட தளத்தைக் கட்டியெழுப்புவது சாத்தியமில்லை, நாட்டில் நீண்ட மக்கள் யுத்தத்தை நடத்துவது சாத்தியமில்லை என்ற வாதம் புதிய ஒன்றல்ல. ஆளும் வர்க்கங்கள், அவர்களுக்குச் சேவை செய்யும் அறிவாளிகள், திருத்தல்வாத பாராளுமன்ற இடதுகள், போலி மாலெ கட்சிகள் ஆகிய இவர்கள் எல்லாம் நீண்ட காலமாகச் சில வாதங்களை முன்வைக்கின்றனர். மக்கள் யுத்ததிற்குள் அதிகமான இழுபறி நீடிப்பதால், இந்தப் பார்வைகள் புரட்சிகர, ஜனநாயக, நாட்டுப்பற்றுக் கொண்ட சக்திகள் மத்தியில் குழப்பத்தை உருவாக்குவதற்கு இட்டுச் செல்கின்றன. மேலும் நீண்ட மக்கள் யுத்தப் பாதையை நிராகரித்த இடதுசாரி சக்திகள் நீண்ட காலமாக அவர்களின் நடைமுறையில் சமூக மாற்றத்தில் எதையொன்றையும் சாதிக்க இயலவில்லை. உண்மையில் அவர்கள் பாராளுமன்ற சகதியில் கழுத்துவரை மூழ்கி, வளர்ச்சி மாற்றத்திற்கு எப்போதும் எதிராக உள்ளார்கள். நீண்ட மக்கள் யுத்தப் பாதை பழங்குடிப் பகுதிகளுக்கு மட்டுமே பொருந்தும், நாட்டின் பிற பகுதிகளில் கைகொள்ள இயலாது என்ற வாதம் நீண்ட மக்கள் யுத்தப் பாதையை ஏற்றுக்கொள்வதாகக் கூறிக் கொண்டே, அதைச் சிதைக்கும் தவறான வாதங்களின் வேறுபட்ட வடிவமாகும். இந்தப் பார்வைக்கு எந்தவொரு அடிப்படையும் இல்லை.*

*பழங்குடிப் பகுதிகளில் இயக்கத்தின் முதன்மையான செயல்பாடுகள் முடங்கிப் போய் உள்ளன என்பது பற்றி கவலையுறும் இந்தியப் புரட்சியின் ஆதரவாளர்களின் பார்வைகள், எதிரியிடமிருந்து வரும் பார்வைகளிலிருந்து வேறுபட்டவை ஆகும். பழங்குடி மக்களின் பரம்பரிய தாயகமாய் இருக்கும் மத்திய, கிழக்கு இந்தியாவின் பரந்த காட்டுப் பகுதிகளில் எமது இயக்கம் இன்று ஒப்பிட்டு அளவில் வலிமையாக உள்ளது என்பது உண்மை. தண்டகாரண்ய, பிகார்-ஜார்கண்ட் கெரில்லா மண்டலங்கள் தொடர்வதன் மூலம் கடந்த பத்தாண்டுகளில் இயக்கம் முன்னேற்றங்களை அடைந்துள்ளது. இந்தியப் புரட்சியின் மூலயுத்தியும் செயலுத்திகளும் என்ற எமது ஆவணத்தில் செயலுத்தி வழிகாட்டுதல்கள் சுருக்கியுரைக்கப்பட்டுள்ளதால், பல்வேறு வகையான சமவெளிப் பகுதிகளில் இயக்கத்தை எவ்வாறு வளர்த்தெடுப்பது என்பது பற்றிய நோக்கும் தெளிவாக உள்ளது. நகர்ப்புறப் பணி பற்றியும் கொள்கை அறிக்கையை முன்வைத்துள்ளோம். ஆயினும், நகர்ப்புறங்களைப் போலவே சமவெளிக் கிராமங்களிலும் எமது இயக்கம் பலவீனமாக உள்ளது.*

இதற்கு அவற்றில் உள்ள வழிகாட்டுதல்கள்படி கட்சி ஊழியர்களைத் தயர்படுத்துவதில் எமது இயலாமையே முக்கிய காரணம் ஆகும். இந்த இரு பகுதிகளின் மூலயுத்தி முக்கியத்துவத்தைக் கருதி ஊன்றி நின்று கொண்டிருப்பதால், சமூக நிலைமைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் பகுத்தாய்வதற்குச் சமூக ஆய்வை மேற்கொள்வதில் முழுமையாக ஈடுபட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக, எதிரியின் எளிதான இலக்குவைத்த தாக்குதல்கள் மூலமே குறிப்பிடத்தக்க அளவிலான அகநிலை ஆற்றல்களை நாம் இழந்துள்ளோம். இந்தப் பகுதிகளில் இயக்கம் பல இழப்புகளை எதிர்கொண்டுள்ளது.

பெரும் எண்ணிக்கையில் கெரில்லா யுத்தத்திற்குள், வேளாண் மக்கள் திரளை, குறிப்பாக வேளாண் தொழிலாளர்களையும் ஏழை உழவர்களையும் அணிதிரட்ட நம்மால் முடியவில்லை. இதுவே நாட்டின் பரந்த வேளாண்மைச் சமவெளிப் பகுதிகளில் எமது பலவீனத்தின் மிக முக்கியமான அடிப்படை. இதைப் போலவே, பழங்குடி வனப் பகுதியில், புரட்சி இயக்கத்திற்குள் புதிதாக உருவாகியுள்ள நடுத்தர வர்க்கங்கள் உள்ளிட்ட உழவர் அல்லாதவர்களை ஒன்றுதிரட்டுவதில் உள்ள எமது இயலாமை இயக்கம் பலவீனம் அடைவதற்கு இட்டுச் செல்கிறது. இவை மையமான பணியை நிறைவேற்றுவதற்கான எமது முயற்சிகளின் மீது எதிர்மறை விளைவை ஏற்படுத்துகின்றன. கிராமப் பகுதிகளிலும், நகர்ப்புறப் பகுதிகளிலும் எமது இயக்கத்தின் பலவீனங்களையும் இயலாமைகளையும் பகுப்பாய்வு செய்யும் வேளையில் நேர்மறை கூறுகளை நாம் பார்க்கத் தவறக் கூடாது. சில தொழிலாளர் பகுதிகளில் புரட்சி இயக்கம் பரந்த அனுபவத்தைப் பெற்றுள்ளது என்பதை மறக்கக் கூடாது. ஒன்றிணைந்த பிறகான கடைசி பத்தாண்டுகளில் பெற்ற புதிய அனுபவங்களே படிப்பினைகளைப் பெற்றுக் கொள்வதற்கும், நாம் பின்னடைவுக்குள்ளான பகுதிகளில் இயக்கத்தை மீண்டும் கட்டியெழுப்பவும், நாம் பலவீனமுற்ற வேளையில் பலப்படுத்திக் கொள்ளவும், நாம் வேலை செய்யாத பகுதிகளில் வேலைகளை விரிவாக்கவும் உதவின. கலிங்காநகர், சிங்கூர், நந்திகிராம், லால்கர், நாராயண்பட்னா ஆகிவற்றின் மக்கள் எழுச்சியிலிருந்தும், தனிமாநிலத்திற்கான தெலங்கானா இயக்கத்திலிருந்தும் நம் கட்டாயம் கற்றுக் கொள்ள வேண்டும். காரணம் இவையெல்லாம் கிராம, நகர்ப்புற மக்கள் திரள் முழுவதின் மீதும் நேர்மறையான தாக்கத்தைச் செலுத்தின. பழங்குடிப் பகுதிகளுக்கு வெளியே, பரந்த கிராமப் பகுதிகளிலும் நகரங்களிலும் ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவ, தரகு அதிகாரத்துவ முதலாளியச் சுரண்டல், ஒடுக்குமுறை ஆகிய நுகத்தடிகளின் கீழ் பெரும்பான்மையான மக்கள் இருக்கின்றனர். தங்கள் பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு அவர்கள் போராடுவதைத் தவற வேறு வழி ஒன்றுமில்லை. அவர்கள், மக்கள் யுத்தம் நடந்து கொண்டிருப்பதின் மூலம் அதன் செலவாக்கிற்கு உட்பட்டு இருக்கின்றனர் ஆகவே, இந்தப் பகுதிகளின் நிலைமை புரட்சிகர யுத்தம் பரவுவதற்கு சாதகமாக உள்ளது. எதார்த்தமான நிலைமையையும் மக்களிடையே உள்ள பல்வேறு வர்க்கங்களின், பிரிவுகளின் கோரிக்கைகளையும் மனதில் கொண்டு, படைப்பாக்கப்பூர்வமாகச் செயல்பட வேண்டியதே நம் தேவை. எமது அரசியல்-இராணுவ வழியில் நெறிபிறழாமல், எமது பரந்த அனுபவத்தின் ஒளியில், சரியான வேலைமுறையைக் கைகொண்டு, தவறுகளைத் திருத்திக் கொண்டு, மாறும் நிலைமை, எதிரியின் செயலுத்திகள் ஆகியவற்றுக்குத் தகுந்தாற்போல சரியான செயலுத்திகளைத் தொழிற்படுத்தித் திட்டமிட்டுச் செயலாற்றும் பண்புடன் படைப்பாக்கப் பூர்வமாகச் செயல்பட்டு, இந்தப் பகுதிகளில் மக்கள் திரளை ஒன்றுதிரட்டுவதன் மூலமும் முன்னேற்றகரமான கெரில்லா யுத்தத்தின் மூலமும் வர்க்கப் போராட்டத்தைக் கட்டியெழுப்பவதற்கு அற்புதமான புறச் சூழ்நிலைமைகளைப் பயன்படுத்திக் கொள்ளும் திறனை நாம் பெற வேண்டும். கடந்த பத்தாண்டுகளைப் புதிய, தனிகரற்ற, ஈடிணையற்ற சாதனைகள் மீது கட்டியெழுப்பியதைப் போன்றே, இதே வழியில் புதிய, பெரிய, புகழ்பூத்த வெற்றிகளைப் பெறுவதற்கு இந்தியப் புரட்சி இக்கட்டான நிலையை உறுதியாகக் கடந்து முன்னேறிச் செல்லும்.

*மாசெஏ: சரணடைதல் குறித்த கொள்கைகள் மேம்படுத்தப்பட்டதை அடுத்து மிக அதிகமான மாவோயிஸ்ட்கள் சரணடைந்துள்ளனர் என்று அரசு சொல்கிறது. உண்மை என்ன ?*

சரண்டைதல் கொள்கையை மேம்படுத்தியதின் மூலம் என்ன செய்துவிட்டதாக நினைக்கின்றனர் ? அதிக பணம், அதிகமான மறுவாழ்வு வசதிகள் கொடுக்கிறோம் என்று பகட்டாக நினைக்கின்றனர். இது பொதுவான நுகர்வு(வாதம்). அதிக பணம், சிறந்த மறுவாழ்வு வசதிகள் வழங்கிய பின்னும்கூட சரணடைபவர்கள் அதிகரிக்கவில்லை. இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. தங்கள் உரிமைகளுக்காகச் சண்டையிடும் பழங்குடிகளையும் ஏழை மக்களையும் துன்புறுத்துவதில், உலகில் உள்ள மிகமிக கொடூரமான ஆட்சிகளில் ஒன்றாக இந்திய அரசு உள்ளது. அவர்கள் இபொக (மாவோயிஸ்ட்) தலைமையின் கீழ் போராடுவதால் சொற்களில் விவரிக்க

*முடியாத அளவுக்கு அட்டூழியங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். அரசின் ஏகாதிபத்திய ஆதரவு கொள்கைகளை எதிர்த்த போராட்டங்களை ஒடுக்குவதற்கு, அரசு பல அடக்குமுறைகளை கையாள்கிறது. அதில் ஒன்று சரணடைவு கொள்கை. பொதுமக்கள் புரட்சிச் செயல்பாடுகளில் ஈடுபடலாம் அல்லது ஈடுபடமால் இருக்கலாம்; இயக்கம் நடக்கும் பகுதிகளில் அவர்களின் மீது இரத்தம் தோய்ந்த வெறித்தாக்குதலை அரசு படைகள் நடத்துகின்றன. அதிலும் குறிப்பாகப் போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் இலக்குவைத்து தாக்கப்படுகின்றனர். பல வகையான துன்புறுத்தல், வன்புணர்ச்சிக்கு உள்ளாக்குதல், சொத்துகளை அழித்தல், உளரீதியான தாக்குதல் போர்முறையைப் பயன்படுத்தல், (முடமாக்கி விடுவோம் அல்லது கொன்று விடுவோம் என்று அச்சுறுத்துவது அல்லது கொலை செய்து, முடமக்கி) பயமுறுத்தல் முதலான எல்லா வகையான அழுத்தங்களையும் தந்து பெரும் எண்ணிகையில் சரண்டைய வைக்கின்றனர். இவ்வாறு பெரும் எண்ணிக்கையிலான சரணடைவுகளை உருவாக்கி, ஊடகம் முன்பு வெற்றிக் களிப்போடு, திமிரோடு அணிவகுக்க வைக்ககின்றனர். இந்த வகையின் கீழ்தான் மூன்று-நான்கு சரணடைவுகளுக்கும் அதிகமானவை நடந்தன.*

*கட்சி, மவிகெப, மக்கள் திரள் அமைப்புகள் ஆகிவற்றிலிருந்து வெளியேறி, எதிரியின் முன் மண்டியிட்ட சில தனிநபர்கள் சரண்டைந்துள்ளனர். ஆமாம், அண்மைக்காலமாகச் சரணடையும் எண்ணிக்கை கொஞ்சம் அதிகரித்துள்ளது. (மாநிலக் குழு, மாவட்டக் குழு, பகுதிக்குழு அளவிலான) தலைமை மட்டத்தில் இருந்த சிலரும் சரணடைந்துள்ளனர்.*

*எதிரி ஒடுக்குமுறையின் புதியச் சுற்றை ஆரம்பித்து, முன்னெப்போதும் கேட்டிராத அளவுக்கு கொடூரமான ஒடுக்குமுறை நடக்கும் வேளை வந்துள்ளபோது புதிய தியாகங்கள் செய்வது தவிர்க்க இயலாது. இந்த மாதிரியான காலகட்டங்களின் போது, பலவீனமாக உள்ள சிலர் எப்போதும் இயக்கத்தை விட்டு விலகிச் செல்கின்றனர் அல்லது எதிரி முன் சரணடைந்து விடுகின்றனர். இதுதான் இப்போதும் நடக்கின்றது. அரசாங்கத்தின் சரணடைதல் கொள்கையின் பெயரளவிலான மேம்பாட்டின் விளைவாகவும் இருக்கலாம். ஆனால் அது ஓர் முழு காரணமாக இருக்க முடியாது, சிறு காரணமாக மட்டுமே இருக்கும். சரணடைதலுக்கான முதல் காரணம் எதிரியின் மிகக் கொடூரமான ஒடுக்குமுறையே ஆகும். இது மட்டுமல்ல, சரணடைந்த பின்னும் கூட, வர்க்கம், இன்னும் பிற பின்புலங்கள் ஆகியவற்றில் வேறுபட்ட நபர்களை, அவ்வேறுபாடுகளுக்கு ஏற்ப வேறுபட்ட முறையில் அரசு நடத்துகிறது. மக்களுக்குத் துரோகம் இழைத்தவர்கள் மனம் திரும்பி வர முயற்சிப்பதில் மாறுபடுவதற்கு ஒன்றுமில்லை. பல்வேறு வகைகளில், அவர்களிடமிருந்து தகவல் பெற, அவர்களை உளவாளிகளாகப் பயன்படுத்திக் கொள்ள, ஒடுக்குமுறை நடவடிக்கையில் பங்குகொள்ள வைக்க எல்லா வகையான அழுத்தங்களையும் அரசு தருகிறது. `நல்ல வாழ்க்கை` முதலானவற்றை அளித்து, `மையநீரோட்ட`த்தின் பகுதியாக மாற்றுவதற்கே அரசு சரணடைதல் கொள்கைகளை வகுத்துள்ளது என்பதை உண்மையென நினைக்கும் எல்லோரும் சரணடைந்தவர்களுக்கு அவை கிடைக்கவில்லை என்று புரிந்துகொள்ள வேண்டும். `மக்கள் மீதான யுத்தத்தின்` ஒரு பகுதியே அரசின் சரணடைதல் கொள்கைகள் என்பதை எல்லோரும் புரிந்துகொள்ள வேண்டும். அவை இயக்கத்தின் பலவீனத்தைப் பயன்படுத்தி, துரோகம் இழைப்பவர்கள் ஆக்கி, வஞ்சிப்பதற்கு நோக்கம்கொண்டுள்ளன.*

*சரணடைதலுக்கு இரண்டாவது காரணம், எதிரி ஒடுக்குமுறையின் இயல்பையும் இயக்கத்தில் ஏற்படும் தற்காலிக இழப்புகளையும் புரிந்துகொள்ளும் திறனற்று, குழப்பிக் கொள்வது ஆகும். சிலரின் தனிப்பட்ட பலவீனம் மற்றொரு காரணம் ஆகும். இந்தப் பிரச்சனைகளுக்கான தீர்வு எல்லா நிலைகளில் இருக்கும் ஊழியர்களின் அரசியல் உணர்நிலையையும் பொறுப்புணர்வையும் அதிகரித்தல், எதிரியின் உளவியல் யுத்தத்தை எதிர்த்த சண்டையை வெல்லமுடியாத வகையில் அதிப்படுத்தல், தம் சொந்த மக்களை எதிர்த்து எவ்வாறு சரணடைய முடியும் என்ற நிலையை உருவாக்குதல் ஆகியவை ஆகும். இவை தவிர, வேறு வழி ஒன்றுமில்லை. இப்போது கட்சியில் நடைபெறும் போல்ஷ்விக்மயமாக்கல் இயக்கத்தில் இந்த நோக்கம் உள்ளடங்கியுள்ளது.*

*மேலும் ஒரு விசயம், புரட்சிகர ஊழியர்கள், மக்கள் ஆகியோரின் முன்மாதிரி இல்லாத தியாகங்களுக்குப் பச்சை வேட்டையின் முதலாவது இரண்டாவது சுற்று காலகட்டங்கள் சாட்சியங்களாய் விளங்கின என்பதையும் வலியுறுத்த விரும்புகிறேன். முதலாவதாக தியாகம் செய்வதற்கான மக்களின் உறுதிப்பாட்டை அவர்களுக்கே உணரச் செய்வதுடன், இரண்டாவதாக மக்கள் உயர்ந்த அளவிலான உணர்நிலையைப் பெறத் தம்மைத் தாமே தயார் செய்து கொள்வதுடன் புரட்சிகள் முன்னேறிச் செல்கின்றன. உளவியல் போர் முறையின் ஒரு பகுதியாக எதிரி சரணடைதல்களைப் பெரிதுபடுத்திக் காட்டுகிறான். தியாக உணர்வை ஒடுக்க முயலுகிறான். எமது புரட்சிகரப் பிராச்சாரப் போரில் தியாக உணர்வின் மீது முழுதிறனோடு வெளிச்சமிட வேண்டும்.*

*நீண்ட காலம் புரட்சி யுத்தம் தொடரப் போவதால், அரசின் ஒடுக்குமுறையும் தொடரும். ஆகவே, கொடூரமான அமைப்பைத் தூக்கியெறியும் வரை, இந்தக் காலம் முழுதும் ஒப்பீட்டளவில் குறைந்த அளவிலோ, அதிக அளவிலோ எண்ணிக்கையில் சரணடையும் நபர்களும் இருக்கலாம். கட்சி முழுவதில், எல்லாப் பகுதிகளின் எமது இயக்கத்தில் உள்ள புரட்சிகர உணர்வினால் எழும் சுய அர்ப்பணிப்பின் விளைவாக அதிகபட்ச தியாகம் செய்தவர்கள் உள்ளிட்டு, எல்லா அளவிலான தியாகங்களும் செய்தவர்களும் இருக்கிறார்கள். எந்தவொரு புரட்சியிலிருந்தும் இவர்களைப் போன்றவர்களை பிரித்தறிய முடியாது.*

*மாசெஏ: போல்ஷ்விக்மயமாக்கல் இயக்கம் நடத்துவது தேவை எனக் கட்சி ஏன் கருதுகின்றது ? அதிலிருந்து நீங்கள் பெறும் பயன்கள் என்ன ?*

*கட்சியை போல்ஷ்விக்மயமாக்குவதற்கு 2013 இல் எமது கட்சி அழைப்பு விடுத்தது. இப்போது கட்சி, மவிகெப, மக்கள்திரள் அமைப்புகள் ஆகியவற்றில் இப்போது இந்த இயக்கம் நடந்து கொண்டுள்ளது. இந்த இயக்கத்தை நிறைவுசெய்ய இன்னும் கொஞ்ச காலம் எடுத்துக்கொள்ள வேண்டியுள்ளது. எமது கட்சியைப் போல்ஷ்விக்மயமான கட்சியாக மறுவார்ப்பு செய்த பிறகே பிறகே இந்த இயக்கம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது என்று மதிப்பிட முடியும்.*

*ரஷ்ய போல்ஷ்விக் கட்சி என்று பிரபலமாக அறியப்படும், சோவியத் ஒன்றியப் பொதுஉடைமைக் கட்சிதான்(சோஒபொக(போ)) உலகில் முதன்முதலாக முதலாளியத்தைத் தூக்கியெறிந்து, பாட்டாளி வர்க்கச் சர்வதிகாரத்தை நிறுவியது. உலகில் எந்தவொரு பொதுஉடைமைக் கட்சியும் அதிகாரத்தில் இல்லாத போது, தொழிலாளி வர்க்கத்தையும் உழைப்பாளி மக்களையும் அதிகாரத்திற்கு அந்தக் கட்சி கொண்டு வந்தது. போல்ஷ்விக் கட்சி மனித குல வரலாற்றில் முதல் முறையாகச் சோசலிசத்தைக் கட்ட முனைந்தது. ஆகவே, இந்தக் கட்சியை முன்மாதியாக நாம் எடுத்துக்கொள்கிறோம். எல்லாவற்றையும் சாதிக்கும் உற்சாகத்தைப் பெறுவதற்கு, அக்கட்சியிடமிருந்து பாடங்கள் கற்பதன் மூலம் பாட்டாளி வர்க்கக் கட்சியாக உறுதிபெற முடியும். இதையே போல்ஷ்விக்மயமாக்க இயக்கம் என்று பெயரிட்டு அழைக்கிறோம். மற்றொருபுறம், நமக்குச் சீனப் பொதுஉடைமைக் கட்சியின் (சீபொக) முன்மாதிரியும் மிக முக்கியமானது. காரணம் இந்தியாவும் சீனாவும் பல ஒற்றுமைகளைக் கொண்டுள்ளன. நீண்ட மக்கள் யுத்த வழி, மக்கள் சேனை, வெற்றிகரமான ஐக்கிய முன்னணி, விடுவிக்கப்பட்ட தளப்பகுதிகளைக் கட்டியெழுப்பும் போக்கு ஆகியவற்றின் மூலம் பெரும்பான்மையான உழவர்களைக் கொண்ட பின்தங்கிய நாட்டில் வெற்றிகரமாகப் புரட்சி செய்து, சோசலிசத்தைக் கட்டியெழுப்பியதற்காகச் சீபொக நன்கு அறியப்பட்டுள்ளது; ஊக்கும் சக்தியாக விளங்குகிறது. தொடங்கப்பட்டது முதல் சோஒபொக(போ)ஐ முன்மாதிரியாகக் கொண்டு, சீபொக தன்னைத்தானே வலிமைப்படுத்திக் கொண்டது. ஆகவே, அந்தக் கட்சியின் அனுபவ ஒளியில் அந்த மாதிரியான இயக்கத்தை, குறிப்பாக மாபெரும் விவாதத்தின் மூலமும், மாபெரும் பாட்டாளி வர்க்கப் பண்பாட்டுப் புரட்சி மூலமும் கிடைத்த மிக முக்கியப் பட்டிப்பினைகளின் ஒளியில் நாமும் மேற்கொள்ள வேண்டும் எனத் தீர்மானித்தோம். முன்மாதிரிகளாக விளங்கும் இந்த இரு கட்சிகளைப் பின்பற்றி, ஆனால் எமது கட்சியின் நீண்ட வரலாற்றில் பெற்ற அனுபவங்களின் ஒளியில் கட்சியைப் போல்ஷ்விக்மயமாக்க முயல்கிறோம்.*

*இந்த இயக்கத்தை மேற்கொள்வதற்கான காரணங்கள் :*

1) *எதிரியின் நாடுதழுவிய ஒடுக்குமுறையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஒடுக்குமுறை மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.*
2) *இப்போது மிக இக்கட்டான நிலைக்கு முகம்கொடுத்துக் கொண்டிருக்கும் எமது கட்சி, இயக்கம் ஆகியவற்றுக்கு பல படிப்பினைகள் கிடைத்துள்ளன.*
3) *கட்சியில் இருக்கும் மிகப் பெரும்பான்மையான தோழர்கள் உழவர், மத்தியதர வர்க்கங்களிலிருந்து வந்துள்ளனர். ஆகவே கட்சியில் பாட்டாளி வர்க்கக் கண்ணோட்டத்தை வளர்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.*
4) *சமூகத்தில், புரட்சிப் போரில் ஏற்பட்டுள்ள மிக முக்கியமான பொருளாதார, அரசியல் மாற்றங்களுக்கு ஏற்ப முறையாகச் செயலுத்திகளை ஆய்ந்து வளர்த்தெடுப்பதில் எமக்குத் தோல்விகள் ஏற்பட்டுள்ளன.*
5) *கட்சிக்குள் சில தீவிரமான பாட்டாளி வர்க்கமல்லாத போக்குகள் நிலவுகின்றன.*

*தோழர்கள் பார்வையில் பாட்டாளி வர்க்கமல்லாத போக்குகள் தொடர்வதால், இந்தச் சவால்களைச் சமாளிப்பதற்கு, திறமையாகப் புரட்சியை வழிநடத்தும் பொருட்டு அமைப்புரீதியாகக் கட்சியை வலிமைப்படுத்துவதற்குக் கட்சியின் கருத்துநிலை, அரசியல் மட்டத்தை உயர்த்துவதற்கே போல்ஷ்விக்மயமாக்கும் இயக்கத்தை மேற்கொண்டுள்ளோம். இந்த வழியாக மட்டுமே, இப்போதைய இக்கட்டான நிலையை வெற்றிக் கொண்டு, முன்னேறிச் செல்ல முடியும். நாங்கள் சில துல்லியமான இலக்குகளை அடையும் பொருட்டு, திட்டமிட்ட வகையில் இந்த இயக்கத்தை நடத்த முடிவுசெய்தோம்.*

*இந்த இயக்கம் பாட்டாளி வர்க்கக் கண்ணோட்டத்துடன் கட்சியை மறுவார்ப்பு செய்யும். உட்பக்கத்தில் கட்சி, குறிப்பாக புதிய சக்திகள் மத்தியில் வலிமைபெறும். கட்சி முழுவதும் மாலெமா-வின் கருத்துநிலை சார்ந்த கல்வியில் திறமை அடைதல், அதில் பயிற்சி பெறுதல் ஆகியவற்றின் மூலம் இதைச் செய்து முடிக்க வேண்டும். இப்போதைய நிலையில் அடைவதற்குரிய எதர்த்தமான இலக்குகளைப் பற்றிய தெளிவான புரிதலை ஏற்படுத்தி, புதிய ஜனநாயகப் புரட்சியின் இலக்கு பற்றி மிகமிகத் தெளிவான, துல்லியமான புரிதலைக் கட்சி முழுவதும், ஒவ்வொரு கட்சிக் கிளையிலும் உருவாக்க வேண்டும். இதை செய்ய, மாஓ கற்பித்த மூன்று வேலை பாணிகளை ஆழமாகக் கற்றுக்கொள்ளுதல் உதவும். மேலும் இவ்வியக்கம் எமது வேலை பாணியை மேம்படுத்தியது; இரகசியக் கட்சியைக் கட்டியெழுப்புதல், அமைப்புச் செயல்பாடு பற்றிய எமது புரிதலையும் மேம்படுத்த்தியது; கெரில்லா போருடைய நடைமுறைக் கோட்பாடுகள் பற்றிய புரிதலை மேம்படுத்திக் கொள்ளவும் அதில் ஏற்பட்டுள்ள பின்னடைவுகளை விரைவாகத் திருத்திக் கொள்ளவும் உதவியது; கட்சியில் பாட்டாளி வர்க்கமற்ற போக்குகள் தொடர்தலைத் திருத்திக் கொள்ள உதவியது; அவற்றுக்கு எதிராகச் சண்டையிடுவதற்கு கட்சியின் உணர்நிலையும் எச்சரிக்கையுணர்வும் மேம்படுத்தியது. மேலும் இது சிந்தனை, செயல்பாடு, நடத்தைநெறி ஆகியவற்றின் ஒற்றுமையை வலிமைப்படுத்தி, மேம்படுத்தியது. இவ்வியக்கம் பல்வேறு பொருளாதார, அரசியல், இன்னும் பிற போராட்டங்களில் மக்களை ஒன்றுதிரட்டி, அவர்களுடன் உறுதியாக இணைந்து பங்கேற்பதன் மூலம் கட்சியை வலிமைப்படுத்த்தி, அதன் மக்கள்திரள் அடிப்படையை விரிவாக்குவதில் நல்விளைவை ஏற்படுத்தியது. அது மேலும் வேளாண் புரட்சி யுத்தத்திற்குள் உழவர் பங்கேற்பிற்கு முதன்மை அளிப்பதற்கும் மிகப் பரந்த உழவரல்லாத மக்கள்திரள், நகர மக்கள் ஆகியோர் மத்தியில் சிறப்புக் கவனம் செலுத்துவதற்கும் இட்டுச்சென்றது. இது மாற்றமடைந்துள்ள சமூக-பொருளாதார, அரசியல், பண்பாட்டு நிலைமைகள் பற்றி பயில்வதற்கும், அதன்படி செயலுத்திகளை மாற்றிக் கொள்வதற்கும், அதனால் இயக்கத்தை வெற்றிகரமாக வளர்ப்பதற்கும் வழிநடத்தியது.*

*புரட்சியின் போது நிகழும் மிக இக்கட்டான நிலைமைகள், துன்பங்கள், கடினமான நிலைமைகள் ஆகியவற்றுக்குத் தோழர்கள் முகம்கொடுத்து உணர்நிலை பெற்று, எதிரியுடன் சண்டையிடுவதற்குத் தயார்நிலையை உயர்த்திக் கொண்டு, தோழர்கள் உறுதி அடையவே இந்த இயக்கத்தை நாம் நடத்தினோம். இறுதியாக, குறிப்பாக எமது அகநிலை ஆற்றல்களை, குறிப்பாக எதிரியின் மிகக் குரூரமான ஒடுக்குமுறையிலிருந்து இயக்கத்தையும் உயர்மட்ட தலைமையையும் பாதுகாப்பதில் திறன்பெற பயின்றுள்ளோம். மேற்கூறிய எல்லா விளைவுகளையும் இந்த இயக்கத்தின் கருவான மார்க்சிய-லெனினிய-மாவோவியத்தை (மலெமாவை) ஆழமாகக் கைகொள்ளுதலின் மூலம் சாதித்துள்ளோம்.*

*மாசெஏ: நீண்ட மக்கள் யுத்தப் பாதை காலத்திற்கு ஒவ்வாதது என்று எதிரி பிராசாரம் செய்கிறான். சிலர் சாவோசின் 21 ஆம் நூற்றாண்டு சோசலிசத்தை ஆதரிக்கின்றனர். பிரசண்டா-பட்டாராய் கோஷ்டி தலைமையிலான ஒன்றுபட்ட நேபாளப் பொதுஉடைமைக் கட்சியினர் (மாவோயிஸ்ட்) [UCPN(Maoist)] [ஒநேபொக(மாவோயிஸ்ட்)] நீண்ட மக்கள் யுத்த வழியைக் கைகழுவி விட்டு, பாராளுமன்றப் பாதையைக் கைகொண்டுள்ளனர். இந்தியாவிலும், உலகமயமான இன்றைய உலகெங்கும் நிண்ட மக்கள் யுத்தப் பாதையின் ஏற்புத்தன்மை பற்றி பல கேள்விகள் எழுந்துள்ளன. இந்த வாதங்கள் எல்லாவற்றிற்கும் கட்சியின் பதில் என்ன ?*

*நிலப்பிரபுத்துவத்தையும் முதலாளியத்தையும் எதிர்த்த போராட்டங்களில் புரட்சிகர ஆற்றலாக உழைக்கும் வர்க்கம் எழுந்த பிறகு, இன்னும் குறிப்பாக பாரிஸ் கம்யூன் காலப் பாட்டாளி வர்க்கப் புரட்சிகளில் மார்க்சு எங்கெல்சு பாட்டாளி வர்க்கக் கருத்துநிலையை நிறுவிய, அக்காலம் முதல் உலகு எங்கிலும், இப்போது நமது நாட்டிலும் சுரண்டலாளர்களும் எதிர்ப்புரட்சியாளர்களும் மார்க்சியத்தையும் புரட்சியையும் எதிர்த்து பிரச்சாரம் செய்துவருகின்றனர். ரஷ்யாவும் சீனாவும்*

*திருத்தல்வாதத்திற்கு மாறிய பிறகு, அவர்கள் மார்க்சியம் தானாகவே காலத்திற்கு ஒவ்வாதது ஆகிவிட்டது என்று பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளனர். இதற்கான காரணம் மிகத் தெளிவானது. புரட்சியும் மார்க்சியமும் அவர்களுக்கு முடிவு கட்டும்.*

*எப்படி நீண்ட மக்கள் யுத்தப் பாதை காலத்திற்கு ஒவ்வாதது ஆகிவிட முடியும் ? மாஓ இறப்புக்குப் பிறகு, உலகில் நடைபெற்ற எல்லா புரட்சிகளும், அது புதிய ஜனநாயகப் புரட்சியாகவோ, தேசிய விடுதலைப் போர்களாகவோ எதுவாக இருந்தாலும் சரி நீண்டகாலம் நடைபெற்றது. அவற்றில் சில துரோகத்தை எதிர்கொண்டன அல்லது கைகழுவி விடப்பட்டன என்ற போதிலும், அவை எல்லாம் நீண்ட காலம் நடைபெற்றன என்பது ஒரு முக்கியமான உண்மை. மிக நீண்ட காலமாக அரை நிலப்பிரத்துவக் கட்டமைப்பு அடிப்படை மாற்றம் ஒன்றும் அடையவில்லை. நமது நாட்டைப் போன்று ஏகாதியபத்தியம் ஆதிக்கம் செலுத்தும் நாடுகள் சுதந்திரமாக வளர்ச்சி அடைய அனுமதிக்கப்படவில்லை, கட்டுப்படுத்தப்படுகின்றன. இந்த வகையான நாடுகளின் விடுதலைக்கான வழி நீண்ட மக்கள் யுத்தப் பாதையே, தவிர வேறு வழியில்லை. சில நிலக்கிழாரிய வடிவங்கள் மாறி இருக்கலாம். ஆனால், எப்போதும் தரகு அதிகார வர்க்கத்தின் நலன்களுக்கான அடிப்படையாக ஏகாதிபத்திய சேவை இருப்பதைப் போல, நிலக்கிழமையும் ஏகாதிபத்திய நலன்களுக்கு சேவை செய்வதற்காகவே பிழைத்திருக்கிறது. இதனாலே மக்கள் ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலவுடைமை எதிர்ப்புப் புரட்சியான புதிய ஜனநாயகப் புரட்சியின் வெற்றிக்காக கட்சித் தலைமையின் கீழ் நீண்ட மக்கள் யுத்தப் பாதையில் போரிடுகின்றனர். எமது நாட்டின் குறிப்பான பண்புநிலைகளே, எமது கட்சியின் வழிகாட்டுதலில் மக்கள் மேற்கொண்டுள்ள போர் நீண்ட காலத் தன்மையுடையது என்று தீர்மானிக்கின்றது. இவற்றுக்காகவே நீண்ட கால மக்கள் யுத்தத்தை மேற்கொள்கிறோம். நான் ஏற்கனவே இந்திய போன்ற நாடுகளில் வெற்றிகரமாகப் புரட்சியை மேற்கொள்வதற்கு நீண்ட கால மக்கள் யுத்த வழி மிகமிக அவசியம் என்பதை விளக்கியுள்ளேன்.*

*இப்போது சாவோசு பற்றியும் 21ஆம் நூற்றாண்டு சோசலிசம் என்றழைக்கப்படும் அவருடைய மாடல் பற்றியும் சில சொற்கள். இப்போதுவரை உலகில் புரட்சி நடத்துவதற்கு எழுச்சிப் பாதை, நீண்ட மக்கள் யுத்தப் பாதை ஆகிய இரு பாதைகளே உள்ளன. இவை இரண்டையும் குறிப்பிட்ட நாடுகளில் உள்ள தனித்தன்மையான, துல்லியமான நிலைமைகளுக்கு ஏற்பக் கையாள வேண்டும். புதிய வரலாற்றுச் சூழலுக்கேற்ப இந்த இரு பாதைகளையும் மாற்றியமைக்க வேண்டும். புரட்சிகள் என்பவை இயந்திரகதியானவை அல்ல, வறட்டுத் தனமானவை அல்ல, படைப்பாக்கரீதியானவை என்றே மார்க்சியம் சொல்கிறது. ஆனால் எந்தவொரு மாற்றங்கள் செய்தாலும் புரட்சிகளின் அனுபவங்களின் வரம்பிற்குள் அமையும்படி செய்ய வேண்டும். புரட்சி மிகமிக அவசியமாய் இருக்கிறது. ஆயினும் அது குறிப்பிட்ட நாட்டின் குறித்த பண்புநிலைகளில் நடைபெறுகிறது. வர்க்கமற்ற சமூகத்தை நோக்கி நடைபோடும் நோக்கமின்றி, சீரழிந்த அமைப்பைச் சீர்திருத்த முயலுவது பயனற்றது. சாவோஸினுடைய மாடல் புரட்சி அல்ல, மிகமிக அதிகமான சீர்திருத்தம். அது உள்ளடக்கத்தில் அல்லாமல் வடிவத்தில் மட்டுமே சோசலிசமாய் தோன்றுகிறது.*

*ரஷ்ய, சீனப் புரட்சிகளுக்குப் பிறகு உலகில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. முதலாளிய நாடுகளிலும், மூன்றாம் உலகத்திலும் குட்டி முதலாளியப் பிரிவினர் குறிப்பிடதக்க அளவு அதிகரித்துள்ளனர். அவர்களில் ஒரு பிரிவு தராளவாத முதலாளிய கருத்துகளுக்கு ஆட்பட்டுள்ளது, மற்றொரு பிரிவு கற்பனை நோக்குடைய சோசலிசக் கருத்துகளுக்கு ஆட்பட்டுள்ளனர். முதலாளிய ஜனநாயகப் புரட்சி அல்லது புதிய ஜனநாயகப் புரட்சி நடைபெறாத நாடுகளில், குட்டி முதலாளியப் பிரிவினரைத் தமக்குள் ஈர்த்து பரந்த அளவில் வலுப்பெறாத புரட்சி இயக்கங்கள் நிலவும் இடங்களில், நாடுகளில் குட்டி முதலாளியப் பிரிவுகளில் பெரும்பாலோர் முதலாளியப் பாராளுமன்றச் சட்டகத்தில் சில மாற்றம் அல்லது சீர்திருத்தங்களைக் கோருகின்றனர். வெனிசுலாவில் உழவர், உழைப்பாளி வர்க்கங்களின் விருப்பங்ளை நிரைவேற்றுவதில் சாவேசு சில முன்னோக்கிய அடிகளை வைத்துள்ளார். அவர்களின் முக்கிய உற்பத்திப் பொருள் எண்ணெய். ஆகவே எண்ணெய் உள்ளிட்ட சில பிற தொழில்துறைகளையும் நாட்டுடைமை ஆக்கியுள்ளார். ஆனால் நிலப்பிரபுத்துவமும் தரகு அதிகாரத்துவ முதலாளியமும் தூக்கியெறியப்படவில்லை என்பதுடன் இன்னும் பல எல்லைகளுக்கு உட்பட்டு இதைச் செய்துள்ளார். அவர்கள் உலக முதலாளிய அமைப்பிலிருந்து துண்டித்துக் கொள்ளவில்லை, அவ்வமைப்பில் அடிப்படை மாற்றம் ஒன்றையும் செய்யவில்லை. அவர்கள் ஏகாதிபத்திய ஆதிக்கத்திலிருந்து முழுமையாகச் சுதந்திரம் அடையவில்லை. வெனிசுலாவில் ஏழை மக்களுக்கு எதிராய் இருக்கும் நிலவுடைமையாளர், தரகு முதலாளியச் சக்திகளின் முக்கியப் பிரிவுகள் சாவேசின் சீர்த்திருத்தங்களை ஆவேசமாக எதிர்த்து வருகின்றனர். இதை சுய ஆதாயத்திற்காக மறைத்து விட்டு, பல்வேறு பிரிவினரிடம் சாவேசு மாடல் விரிவாகப் பிராச்சாரம் செய்யப்படுகிறது. அவர் வர்க்கப் போராட்டத்தில் வெகுமக்களை அணிதிரட்டவில்லை. சாவேசு பொலிவரையும் சே குவேராவையும் வழிபடுகிறார். ஆனால்*

*அவருடைய மாடல் பொலிவர் வழியை, சே குவேரா வழியை விட்டு விலகியது. அது முற்றிலும் சீர்த்திருத்தவாதம் ஆகும். இதனாலே நமது நாட்டில் சீரழிந்த நிலையில் உள்ள இபொகவும், இபொக(மா)வும் சாவேசு மரபை உயர்த்திப் பிடிக்கின்றனர். ஒன்றுபட்ட கட்சியில் இருந்த போது அவர்கள் நேருவிய சோசலிசத்தை உயர்த்திப் பிடித்து புரட்சிக்குத் தூரோகம் இழைத்தனர்.*

*நேபாளத்தில் பாராளுமன்றமுறை அரை நிலப்பிரபுத்துவத்தின் மீதும், ஏகாதிபத்திய அடித்தளத்தின் மீதும் அமைக்கப்பட்டுள்ளது. ஒருபுறம், அது இந்திய விரிவாக்கவாதத்தின் கீழ் இருக்கிறது. மற்றொரு புறம் அதில் சீனச் செல்வாக்கும் உள்ளது. புரட்சியைக் கைகழுவுவதற்கு விரும்பும் எவர் ஒருவரும் அதில் இணைந்து கொள்வார்கள். புதிய ஜனநாயகப் புரட்சியில் நல்ல வெற்றிகள் பெற்ற போதிலும், ஒநேபொக(மாவோயிஸ்ட்)-இல் உள்ள பிரசண்டா – பட்டாராய் நவீன திருத்தல்வாத கும்பல் பாராளுமன்ற பாதையைத் தேர்ந்தெடுத்துள்ளனர். இது சாதாரண தூரோகமல்ல. அவர்கள் லட்சக் கணக்கான மக்களுக்கும் ஆயிரக் கணக்கான தியாகிகளுக்கும் தூரோகம் இழைத்துள்ளனர். முந்தைய எல்லாத் திருத்தல்வாதிகளையும் போலவே, தங்கள் சொந்த நலன்களுக்காக, ஆளும் வர்க்கத்துடன் அதிகாரத்தைப் பகிந்துகொள்வதற்காகத் தூரோகம் இழைத்து உள்ளனர்*

*உலகமயமாக்கல் நடைமுறைக்கு வந்த பிறகு பொருளாதார, அரசியல், பண்பாட்டு வடிவங்களில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்று நாங்களும் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் இந்த மாற்றங்கள் யாருக்காக ஏற்பட்டன ? இந்த மாற்றங்கள் ஏகபோக முதலாளியத்தின் விருப்பங்களை நிறைவேற்றுவதற்கு ஏற்பட்டன. உலக முதலாளிய அமைப்பு கடந்த 23 ஆண்டுகளாக இந்த மாற்றங்களைச் செய்துவருகின்றது. இது முதலாளிய, ஏகாதிபத்திய, மூன்றாம் உலக நாடுகளின் ஆளும் வர்க்கப் பிரிவினர் காலனிய, அரை காலனிய நாடுகளின் தொழிலாளர், உழைக்கும் மக்கள்திரளை அதீதமாகச் சுரண்டுவதற்கும், இயற்கை, இன்னும் பிற வள ஆதாரங்களைக் கட்டற்றுக் கொள்ளையிடுவதற்கும் வாய்ப்பை வழங்கியுள்ளது. இது பணக்காரர்களின் வருவாய்க்கும் ஏழைகளின் வருவாய்க்கும் இடையே மிகப் பெரும் அளவில் இடைவெளியை அதிகாரிப்பதற்கு இட்டுச்சென்று உள்ளது. விண்ணை முட்டும் அளவுக்கு வளர்ந்து செல்வதற்கு மூலதனம் மென்மேலும் மையப்படுத்தப் படுதலுக்கும் ஒருநிலைப்படுத்தப் படுதலுக்கும் இட்டுச்செல்கிறது. இதே காலகட்டம் மேற்கு ஆசியாவிலும் பின்னர் ஆப்கானிஸ்தானிலும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலையீடுகள் அதிகரித்தன என்பதற்கும் சாட்சியம் ஆகியுள்ளது. மிகப் பெரும்பாலான ஏகாதிபத்திய, முதலாளிய அரசுகள், குறிப்பாக அமெரிக்க அரசு, அவர்களது அடிவருடி ஆட்சிகள் புது வகை பாசிச ஆட்சிகளாக மாறியுள்ளன. உள்நாட்டு மொத்த உற்பத்தி வளர்ச்சி, வலிமையான பொருளாதாரம், வேலைவாய்ப்பு, நிதிவளம் உள்ளிட்ட எல்லாவற்றையும் அடைய ஒரே தீர்வு வழியாக புதிய தாராளவாதக் கொள்கைகள் மட்டுமே என உறுதிகூறிட ஆளும் வர்க்கங்கள் முயன்றனர். 2008 ஆம் ஆண்டின் உலகு தழுவிய பொருளாதார நெருக்கடியுடன் இந்த வகையான உறுதிமொழிகளும் சீட்டுக் கட்டைப் போல சரிந்தன. ஏகாதிபத்தியப் பொருளாதார நெருக்கடியின் விளைவாகப் புதிய தராளதாரவாதக் கொள்கைகள் மூலம் மட்டுமல்ல, ஆக்கிரமிப்புப் போர்கள், புதிய காலனிய தலையீடுகள் அதிகரித்தல், பிற மூன்றாம் உலக நாடுகளை அச்சுறுத்தல், கட்டுப்படுத்தல் ஆகியவற்றின் மூலமும் மக்கள் வாழ்வில் ஏகாதிபத்தியம் நாசத்தை விளைவிக்கிறது என்று நோக்க வேண்டும். `உலகமயமாக்க`லுடன் ஏகாதிபத்தியவாதிகள் நெருக்கடியிலிருந்து வெளிவருவதற்கு, அதனால் விளையும் நாசங்கள் அனைத்தையும் ஏற்றுக்கொள்வது ஒன்றை மட்டுமே ஒரே தீர்வாகத் தஞ்சமடைந்து உள்ளனர். உலக மக்களை, குறிப்பாக மூன்றாம் உலக மக்களை மேலும் அதிகமாகச் சுரண்டுதல், போரிடுதல், ஒடுக்குதல், அடக்குதல் செய்துவருகின்றனர். ஆகவே ஏகாதிபத்தியத்தையும் அவர் அடிவருடிகளையும் எதிர்த்து சண்டையிடாமல் மூன்றாம் மக்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க இயலாது.*

*ஆகவே, இந்த மாற்றங்கள் அடிப்படையில் புரட்சிப் போரில் மக்களை அணித்திரட்டுவதற்கேற்ப எமது மூலயுத்தியை மேம்படுத்த வேண்டும், செயலுத்தியில் மாற்றங்களைச் செய்ய வேண்டும். முழக்கங்கள், அரசியல் செயலுத்திகள், இராணுவச் செயலுத்திகள், வேலை செய்யும் முறைகள் ஆகியவற்றில் மாற்றங்களைச் செய்ய வேண்டும். அவ்வாறு செய்தால் மட்டுமே நாம் முன்னேற்றம் அடைய முடியும். இந்தத் தீர்வு வழி அரசியல் வழியையும் நீண்ட மக்கள் யுத்தப் பாதையையும் கைகழுவதற்கு அல்ல, அவற்றை மேலும் ஆழமாக இறுகப் பற்றிக் கொள்வதற்கு ஆகும். ஆகவே செயலுத்திகள் நாம் முன்னேற நமக்குச் சேவையாற்ற வேண்டும்.*

*ஒரு சரியான கருத்துநிலை, சரியான அரசியல் வழி, சரியான இராணுவ வழி, பலம் வாய்ந்த முன்னணிப்படையான கட்சி, வலிமையான மக்கள் சேனை, வலிமையான ஐக்கிய முன்னணி ஆகியவை மட்டுமே இப்போதைய அரை-காலனிய, அரை-நிலப்பிரபுத்துவ அமைப்பை*

*துடைத்தழித்து, எமது நாட்டை, மக்களை விடுவித்து, புதிய ஜனநாயகப் புரட்சியை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு ஒரே தீர்வு ஆகும் என்று திரும்பவும் வலியுறுத்தி சொல்கிறேன்.*

*மாசெஏ: உலகப் புறச் சூழல் புரட்சிக்குச் சாதகமாய் திரும்பியுள்ளது என்று கட்சி மதிப்பிட்டிருக்கும் இவ்வேளையில் உலகப் பொதுஉடைமை இயக்கத்தின் நிலைமை எவ்வாறு உள்ளது ? உலகப் பொதுஉடைமை இயகத்தின் மீது அவக்கியனிசம், பிரசண்டா-பட்டாராய் கும்பல் நேபாளப் புரட்சிக்கு இழைத்த துரோகம் ஆகியவற்றின் தாக்கம் பற்றி என்ன நினைக்கின்றீர்கள் ?*

*உலகப் புறச் சூழல் புரட்சி முன்னேற்றம் அடைவதற்கு நேர்த்தி மிக்கதாய் மாற்றம் அடைந்துள்ளது. முன்பே குறிப்பிட்டது போல, மாபெரும் மந்தம் தொடங்கியதிலிருந்து மேலும் மேலும் ஆழமான நெருக்கடிக்குள் தொடர்ச்சியாக முழ்கிக் கொண்டிருக்கும் ஏகாதிபத்திய அமைப்பு ஒருபுறம் பெருந்திரளான வேலை நீக்கம், வேலை வாய்ப்புகள் குறைப்பு, வேலையின்மை, வறுமை ஆகியவற்றிற்கு இட்டுச் செல்கிறது, மறுபுறம் உழைக்கும் மக்கள்திரள் மீதான சுரண்டல், ஒடுக்கப்படும் நாடுகள், மக்கள் மீதான புதிய காலனியக் கொள்ளை ஆகியவை அதிகரிப்பதற்கும் இட்டுச் செல்கிறது. ஈராக், ஆப்கானிஸ்தான், இன்னும் பல போர்முனைகளில் அமெரிக்க ஏகாதிபத்தியம் புதைசேற்றில் முழ்கியுள்ள போதும், ஆக்கிரமிப்புப் போர்களைக் கைவிடுவதற்கான அறிகுறிகள் ஏதும் தென்படவில்லை.*

*உலகத்தின் பல்வேறு பகுதிகளில் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, புரட்சிகர, ஜனநாயக, தேசிய விடுதலைச் சக்திகள் தம் சொந்த நாடுகளில் ஆதரவு பெருகி வலிமை அடைந்து வருகின்றன. தொழிலாளர், உழவர், மதியதர வர்க்கங்கள், கருப்பர்கள், புலம் பெயர்ந்தோர், முசுலிம்களும் இன்னும் பிற வதைக்கப்படும் சமூகங்களும், பெண்கள், மாணவர்கள், ஒடுக்கப்படும் பல்வேறு வர்க்கங்களும் சமூகப் பிரிவினரும் தெருக்களில் இறங்கத் தொடங்கியுள்ளனர். வேலை நீக்கம், வேலையின்மை, வேலைக்குறைப்பு, உண்மை ஊதியக் குறைப்பு, சமூகப் பாதுகாப்புச் செலவீனங்கள் குறைப்பு, அரசாங்கங்களின் வீண் செலவீனங்கள் அதிகரிப்பு ஆகியவற்றை எதிர்த்து, தொழிலாளர் திரளின் மாபெரும் ஆர்பாட்டங்கள், வேலைநிறுத்தங்கள் பல ஐரோப்பிய நாடுகளை உலுக்குகின்றன. முதலாளிய நாடுகளில் பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் இடைவெளி அதிகரித்து உள்ளது, வர்க்க வேறுபாடு கூர்மை அடைந்துள்ளது. மென்மேலும் அதிகமான மக்கள் போராட்டங்களில் இணைகின்றனர். ஜனநாயக உரிமைகளுக்காக ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் கருப்பு மக்கள், முசுலிம்கள், புலம்பெயர்ந்தோர், இன்னும் பிற ஒடுக்கப்படும் மக்கள் போராடி வருகின்றனர். பிந்தங்கிய நாடுகளிலும்கூட, பெரும் செல்வ வேறுபாடு, உழைக்கும் மக்களின் ஏழ்மை, வறுமை, அரசியல் ஒடுக்குமுறை ஆகியவை மாபெரும் எழுச்சிக்கு இட்டுச் செல்கிறது. பல ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் உறுதியற்றத் தன்மை நிலவுகிறது, உள்நாட்டுப் போர் நடந்துகொண்டு உள்ளது. ஈராக், ஆப்கான், பாலஸ்தீன், குர்து, இன்னும் பிற மக்களின் ஆயுதம் தாங்கிய தேசிய விடுதலை போராட்டம் இரத்தக் குளியலுக்கும், மாபெரும் படுகொலைகளுக்கும் முகம்கொடுத்த பின்னும்கூட முன்னேறிச் செல்கின்றது. ஐரோப்பாவின் ஸ்காட், கட்டலோனியன், இன்னும் பிற தேசங்களின் தேசிய உணர்வுகள் நீடித்து நிலவுகிறது. தென் அமெரிக்காவில், பிரேசில் முதலான நாடுகளின் அரசாங்கங்கள் மக்களுக்கு எதிரான புதிய தாராளவாதக் கொள்கைகள் ஏற்றுக்கொள்வதை எதிர்த்து, மக்கள் மாபெரும் போராட்டங்களை ஒருங்கிணைத்து நடத்துகின்றனர்.*

*இவ்வாறு, இன்றைய உலகில் சாதகமான புறச் சூழல் நிலவி போதிலும், உலகப் பொதுஉடைமை இயக்கத்தின் அகநிலை ஆற்றல்கள் மிக மோசமாகச் சுணங்கியுள்ளன. உலகச் சோசலிசப் புரட்சியின் முன்னேற்றத்திற்காகச் சாதகமான புறச் சூழலைப் பயன்படுத்திக் கொள்ளும் மாவோயிச சக்திகளின் அகநிலை திறனுக்கும், புறச் சூழலின் வளமான வாய்ப்புக்கும் இடையே முரண்பாடு நிலவுகிறது. ஒவ்வொரு நாட்டின் துல்லியமான சூழலுக்கு ஏற்றப்படி புரட்சியை முன்னெடுப்பதன் மூலம் அகநிலை பலவீனத்தைக் வெற்றிக் கொள்ளமுடியும் என்று கோட்பாட்டளவில், வரலாற்றுப் படிப்பினைகளிலிருந்து நாம் அறிகின்றோம். மக்கள் பிரச்சனைகளை முன்னெடுப்பதில் திருத்தல்வாத, சீர்திருத்தவாதச் சக்திகள் திறனற்று உள்ளனர் என்று நிரூபணம் ஆகியுள்ளது. ஆகவே மாவோயிச சக்திகளுடன் மக்கள் இணைவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. பல நாடுகளில் மாவோயிச கட்சிகள், அமைப்புகள் வலிமையடைந்து கொண்டுள்ளன; சில புதிய கட்சிகள் உருவாக்கப்படும் நிகழ்ச்சிப்போக்கில் உள்ளன. மாவோயிச கட்சிகள், அமைப்புகள், சக்திகள் ஆகியோரிடையான ஒற்றுமை வளர்ந்து கொண்டுள்ளது. புரட்சிகளின் வலிமையான புதிய அலைக்கான வளவாய்ப்புகள் அதிகரித்துக் கொண்டுள்ளன. பிலிப்பைன்சிலும் இந்தியாவிலும் பல ஏற்ற இறக்கங்களிடையே, நீண்ட மக்கள் யுத்தம்*

தொடர்கின்றது. இன்னும் பல நாடுகளில் மாவோயிச கட்சிகள் போராட்டங்களை மேற்கொண்டுள்ளன. இந்தியாவில் நடைபெறும் மக்கள் யுத்தத்திற்கு ஆதவு அளிக்கும் வகையில் சர்வதேச மாவோயிச சக்திகளின் ஒற்றுமைச் செயல்பாடுகள், எதிர்ப்புரட்சிகரப் பச்சை வேட்டை வேட்டை, ஒப்லன் பயனிஹன் ஆகியவற்றை எதிர்த்து சர்வதேச ஒன்றுதிரட்டல், அரசியல் கைதிகளின் உரிமைகளுக்கான போராட்டங்கள் முதலானவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால், உலகப் பொதுஉடைமை இயக்கமும் மாவோயிச சக்திகளும் மக்கள் போராட்டங்களில் முக்கிய பங்கு வகிக்கும், அதனால் எதிர்காலத்தில் புரட்சி அலை முன்செல்லும் வாய்ப்பு உள்ளது.

பிரசண்டா-பட்டாராய் திருத்தல்வாதக் கும்பல் நேபாள மக்களுக்கும் உலக சோசலிசப் புரட்சிக்கும் இழைத்துள்ள துரோகமும் உலகப் பொதுஉடைமை இயக்கத்திற்கு அதிக சேதத்தை விளைவித்துள்ளன. இந்தத் துரோகிகள் புகழ்பெற்ற நேபாள் மக்கள் யுத்தத்தை உள்ளிருந்து அழித்துவிட்டனர்; ஒடுக்கப்படும் நேபாள மக்கள் மீதான பிடியை இறுக்குவதற்கு எதிரிக்கு உதவியுள்ளனர். இந்தப் பின்னடைவு நேபாள மக்களுக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த உலகப் பொதுஉடைமை இயக்கத்திற்கும் ஆகும். ஆயினும் பிரசண்டா-பட்டராய் கும்பலை எதிர்த்து உண்மையான மாவோயிச சக்திகள் கூர்மையான போராட்டத்தை நடத்தின. அக்கும்பல் ஏகாதிபத்தியவாதிகள், அவர்களது முகவர்கள் முன்பு வெட்கக்கரமான முறையில் சரண் அடைந்துள்ளனர். நேபாள மக்களின் சொந்த போராட்டத்தை எதிர்த்த இந்தத் தூரோகிகள் எதிர்ப்புரட்சிக் கும்பலாக அம்பலப்பட்டுப்போய் உள்ளனர் என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. மாலெமா-வை வளர்த்தெடுத்தல் மேம்படுத்தல் என்ற பெயரில் மாலெமா-விற்குத் துரோகம் இழைத்து உள்ளனர். இந்த நவீன திருத்தல்வாதிகள் ஏகாதிபத்திய, உள்நாட்டு நிலக்கிழாரிய, தரகு அதிகாரத்துவ முதலாளிய சக்திகள், இந்திய விரிவாக்கவாதிகள் ஆகியோருக்கு நம்பகமான பணியாளர்களாக ஆகியுள்ளனர். நேபாள மக்கள் திரளும் உலகப் பொதுஉடைமை இயக்கமும் அவர்களின் வர்க்க இணைக்கவாதத்தை முற்றிலும் நிராகரித்துள்ளனர். இந்த ஒடுகாலிகளை வரலாற்றின் குப்பைக் கூடைக்குள் தூக்கியெறிவதன் மூலம் புரட்சிப் பாதையில் நேபாள் மக்கள் நிச்சயமாக முன்னேறிச் செல்வார்கள்.

இதே போன்று அவாக்கியனிசத்தின் புதிய முடிவுகள் என்று அழைக்கப்பட்டவையும் சில மாவோயிச கட்சிகளை மோசமாக சிதைத்துள்ளன. இதற்குக் காரணம் திருத்தல்வாதம், கலைப்புவாதம் ஆகியவை விவாதிக்கப்பட்டதைப் போன்று அவாக்கியனிசம் விவாதிக்கப்படவில்லை. இது தற்காலிகமாக உலகப் பொதுஉடைமை இயக்கத்தில் தீங்கான விளைவுகளை ஏற்படுத்தலாம். இது உறுதியாகப் பின்னடைவையும் ஏற்படுத்தும். உலகப் பாட்டாளிகளின் இப்போதைய இக்கட்டான நிலையில், சர்வ தேச அளவிலும், நமது நாட்டிலும் அவாக்கியனிசத்தையும், எல்லா வகை திருத்தல்வாத வடிவங்களையும் எதிர்த்து எமது கட்சி தொடர்ச்சியாகப் போராடும்.

மாசெஏ: மோடி தலையிலான தேஜகூ அரசாங்கம் மிக விரைவாக ஏகாதிபத்திய நிகழ்ச்சிநிரலை நடைமுறைப்படுத்துகிறது. ஆர்எஸ்எஸ் இந்துத்துவ ஆதிக்கத்தை வேகமாகப் பரப்புகிறது. உள்துறை அமைச்சர், உள்நாட்டுப் பாதுகாப்பிற்கு பெரிய அச்சுறுத்தலாக மாவோயிஸ்ட்களை இந்திய அரசு கருதுகிறது என்று வலியுறுத்திக் கூறியுள்ளார். இந்தப் பாசிசத் தாக்குதல் எல்லா முன்னணிகள் மீதும் பாயும் என்பது தெளிவு. எவ்வாறு கட்சி இத்தாக்குதலை எதிர்த்துத் தோற்கடிக்கத் திட்டமிட்டு உள்ளது ?

அதிகாரத்திற்கு வந்துள்ள தேஜகூ அரசாங்கம் ஐந்து மாதங்களில், 1990களிலிருந்து வெற்றிப்பெற்ற அரசாங்கங்கள் அமல்படுத்திய தாராளமயம்-தனியார்மயம்-உலகமயக் கொள்கைகளையே இன்னும் வேகமாக அமல்படுத்தியது. உண்மையில் முந்தைய ஐக்கிய முற்போக்கு கூட்டணி(ஐமுகூ) அரசாங்கத்தை விட வேகமாக, அடாவடியாக இந்தக் கொள்கைகளை அமல்படுத்துவதற்காகவே, மோடியையும் பாஜக-வையும் ஏகாதிபத்தியவாதிகள், பெரும் தரகு முதலாளிகள், பெரும் நிலக்கிழார்கள் ஆகியோர் திட்டமிட்டு ஆட்சிக்குக் கொண்டுவந்துள்ளனர். அதனால்தான் `வலிமை`யான நரேந்திர மோடி மூலம் `பலவீன`மான மன்மோகன் சிங் தூக்கியெறியப்பட்டுள்ளார். மோடி தலைமையிலான குஜராத் மாடலில், முசுலிம்கள், தலித்கள், ஆகியோர் மீதான இந்துத்துவப் பாசிச ஒடுக்குதலுடன் உழைக்கும் வர்க்கங்களைக் கொடூரமாகச் சுரண்டும் ஏகாதிபத்திய ஆதரவுக் கொள்கைகள் இணைக்கப்பட்டது. இந்தக் குஜராத் மாடல் இப்போது நாடு முழுவதும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

மோடி அரசாங்கத்தின் அடாவடியான புதிய தாராளவாதக் கொள்கைகள், தொழிலாளர், உழவர்கள், அரசு ஊழியர்கள், பெண்கள், மாணவர்கள், இளைஞர்கள் முதலான பல்வேறு பிரிவினர்

முகம்கொடுக்க வேண்டிய துன்பங்களை அதிகரித்துள்ளன. அரசினதும், இந்துத்துவ பாசிசவாதிகளினதும் முசுலிம்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்துக் கொண்டுள்ளன. தலித்கள் மீதான வன்மமான தாக்குதல்களின் மூலம் நிலக்கிழாரிய எதிர்ப்புரட்சி சக்திகளை வலிமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எழுச்சியடைந்துள்ளன. ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் இன்னும் மோசமான இழிவுப்படுத்தலுக்கு ஆளாகியுள்ளன. தேஜகூ-யின் அடாவடியான விரிவாதிக்கக் கொள்கைகளின் ஆதரவில் பெருந்தேசிய வெறியின் கூச்சல்கள் தெற்கு ஆசியாவின் மக்களிடமிருந்து எதிர்ப்பைக் கிளப்பியுள்ளன. போராட்டங்களில் சில பிரச்சினைகளில் கவனம் குவிப்பதும் மக்களை அமைப்பாக்குவதும் நம் தேவை.

தாராளமயம்-தனியார்மயம்-உலகமயத்தின் அடாவடியான நிறைவேற்றலின் விளைவாக நாட்டின் மீது புதிய காலனிய சுருக்குக் கயிறு மேலும் இறுக்கப்படுகிறது. வெகுமக்களின் சினத்தைத் திருப்பி விடுவதற்கு சங்க் பரிவாரங்கள் குருட்டுத்தனமான தேசியக் கூச்சலையும், நாட்டுப்பற்று வெறியையும் கிளப்பிவிடுவதற்குத் திட்டமிட்டுள்ளன. மோடி அரசாங்கத்தின் நாட்டை முழுவதுமாக விற்கும் உண்மைத் தோற்றத்தை மூடி மறைப்பதற்காகச் சில உத்திகள் பயன்படுத்தப்பட உள்ளன. மோடிக் கும்பலின் ஏகாதிபத்திய ஆதரவு, நிலக்கிழாரிய ஆதரவு நிகழ்ச்சிநிரலை அம்பலப்படுத்த மிக விரிவான பிராச்சாரத்தை மேற்கொள்ள வேண்டும்.

மோடி கும்பலினுடைய `வளர்ச்சி` நிகழ்ச்சிநிரலின் அடாவடியான முன்னெடுப்பின் விளைவு முன்னெப்போதும் கேள்விபட்டிராத அளவுக்கு வாழ்விடவெளியேற்றம் ஆகும். பழங்குடிகளின் உறைவிடம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது என்பது கண்கண்ட உண்மை. இது பெருந்திரள் போராட்டங்களை அதிகப்படுத்தியுள்ளது. இப்போராட்டங்களில் இசைவான போராட்ட வடிவங்களை முன்னெடுப்பது மூலமாகவோ அல்லது ஆதரவு அளிப்பதன் மூலமாகவோ ஆக்கப்பூர்வமாக இடையீடு செய்கிறோம்.

மிக மோசமான புதிய சட்டங்கள் மூலம் மக்கள் மீதான தாக்குதல்கள் மேலும் அதிகரிக்கப்படுகின்றன. ஏகாதிபத்தியங்கள், பெரும் நிலக்கிழார்கள், தரகு அதிகாரத்துவ முதலாளிகள் நிலம், நீர், காட்டு வளங்களையும் மக்களின் வாழ்வையும் சூறையாடுவதற்கு ஏற்ப பழைய சட்டங்களை மாற்றியமைத்து புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துகின்றனர். அரசியல் கைதிகள் மிகக் கொடூரமாக நடத்துவதிலும், மேற்சொன்ன பிரச்சினைகளைக் கையிலெடுக்கும் செயல்பாட்டாளர்களை ஒடுக்குவதிலும் வழக்கமான நீதிமுறைகள்கூட காற்றில் பறக்கவிடப்பட்டு உள்ளன. நாம் மிகுந்த ஊக்கத்தோடு மேற்கூறிய பிரச்சினைகளில் தலையீடு செய்ய வேண்டும். பரந்த அளவில் குடி உரிமை இயக்கங்களை கட்டியெழுப்பவதற்கும், வலிமைப்படுத்துவதற்குமான நல்ல வாய்ப்புகள் உள்ளன.

தேர்தலுக்குப் பிந்தைய நிலைமை பற்றிய மதிப்பீட்டில், மத்தியில் ஆர்எஸ்எஸ் ஆதிக்கம் செலுத்தும் தேஜகூ அரசாங்கத்தின் உருவாக்கம் நாடு முழுவதும் பார்ப்பனிய இந்து பாசிச சக்திகளைத் தோற்கடிப்பதை மிக முக்கியமான கடமையாக முன்னுக்குக் கொண்டுவந்துள்ளது என்று எமது மையக் குழு குறிப்பிட்டது. புரட்சிகர, ஜனநாயக, மதச் சார்பற்ற, நாட்டுப்பற்று அமைப்புகள், சக்திகள், தனிநபர்கள், பரந்துபட்ட வெகுமக்கள் ஆகியோரின் ஒற்றுமை வழியாக வலிமை மிக்க மக்கள்திரள் இயக்கங்களை விரிவான அடிப்படையில் கட்டியெழுப்பவதின் மூலம் பார்ப்பனிய இந்து பாசிச சக்திகளைத் தோற்கடிக்க முடியும். மோடியினுடைய நிகழ்ச்சி நிரலின் ஏகாதிபத்திய ஆதரவு, நிலக்கிழாரிய ஆதவு இயல்பின் உண்மையான தன்மையை அம்பலப்படுத்தி விரிவாகவும் கூர்மையாகவும் பிரச்சாரம் செய்யத் திட்டமிடுவது மிகவும் அவசியம் ஆகும்.

இந்த எல்லாச் செயல்பாடுகளையும் பச்சை வேட்டையின் மூன்றாம் சுற்றைத் தோற்கடிக்கும் செயல்பாடுகளுடன் ஒற்றுமைபடுத்தும் வகையிலும் திட்டமிட வேண்டும். மாவோயிஸ்ட்கள் உள்நாட்டுப் பாதுகாப்பிற்கு மாபெரும் அச்சுறுத்தல் என்று அறிவித்த ஐமுகூ அரசாங்கத்தின் அணுகுமுறையைப் பாசிசவாதி உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கிளிப்பிள்ளைப் போல் சொல்லிக்கொண்டுள்ளார், மாவோயிஸ்ட்களை எதிர்ப்பதற்கே அவருடைய அரசாங்கம் அதிக முதன்மை கொடுகின்றது. கட்சியைப் போல்ஷ்விக் மயமாக்குதல், மக்கள் யுத்ததை வலிமைப்படுத்தல், புரட்சிகர யுத்தத்திற்குள் பரந்துபட்ட மக்களை அணிதிரட்டல் ஆகியவற்றின் மூலம் புதிய எதிர்ப்புரட்சிகர ஒடுக்குமுறையை எதிர்த்துப் போராடித் தோற்கடிப்போம்.

*மாசெஏ: பச்சை வேட்டையின் மூன்றாம் சுற்று தொடங்கப்பட்டுள்ளது. இதை எதிர்கொள்வதற்கு கட்சி எவ்வாறு தயாராகியுள்ளது ?*

காங்கிரசு தலைமையில் ஐமுகூ அரசாங்கம் இரண்டாம் முறையாக ஆட்சியைக் கைப்பற்றிய பிறகு 2009ஆம் ஆண்டு மத்தியில் மேற்கொண்ட நடவடிக்கைகளில் ஒன்று மக்கள் மீதான போராகிய

பச்சை வேட்டை நடவடிக்கை ஆகும். இது எமது நாட்டின் போராடும் மக்கள்திரளின் மீதான பல்முனைத் தாக்குதல்களைத் தொடுக்கும் எதிர்ப்புரட்சி யுத்தம் ஆகும். முந்தைய இரண்டு சுற்றுகளை ஒப்பிடும்போது இன்னும் அதிகமாகப் பரந்துவிரிந்து இருக்கும் பச்சை வேட்டை நடவடிக்கையின் மூன்றாம் சுற்றைத் தொடங்கியதின் மூலம் முந்தைய ஆட்சியாளரின் அதே அணுகுமுறையை மோடி தலைமையிலான தேஜகூ அரசாங்கம் இன்னும் அதிக அடாவடியாக, கொடூரமாக மேற்கொள்கிறது. எமது இயக்கம் வலிமையாய் இருக்கும் பகுதிகளில் அரசாங்கம் அமல்படுத்தும் மக்களுக்கு எதிரான கொள்கைகளை நடைமுறைப்படுத்தில் முதன்மையான தடையாக எமது கட்சி வழிநடத்தும் மக்கள் திரளினர் உருவெடுத்துள்ளனர்

முன்பு எதிர்க்கட்சியாக இருந்தபோது பா.ஜ.க., மாவோயிச இயக்கத்தை ஒடுக்குவதற்கு ஒரு ஒருங்கிணைந்த, மையப்படுத்தப்பட்ட கொள்கையை உருவாக்காததற்காக முந்தைய ஐமுகூ அரசாங்கத்தை விமர்சித்து வந்தது. ஆட்சிக்கு வந்த பிறகு பா.ஜ.க. தலைமையிலான தேஜகூ அரசாங்கம் முழுமையான தாழ்தீவிர யுத்தச் சட்டகத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பச்சை வேட்டை மூன்றாம் சுற்றில் ஒருங்கிணைந்த கொள்கையை இப்போது சில வகையில் மேம்படுத்தியுள்ளது. தலைமைத் தோழர்களைப் பிடிப்பதற்கான பரிசுத் தொகையை அதிகரித்து அறிவித்தல், சரணடைதலுக்கான புதிய கொள்கை அறிவிப்பு, மக்கள் தண்டிக்கும் எதிர்ப்புரட்சி சக்திகளுக்கான இழப்பீட்டுத் தொகையை அதிகரித்தல், போலி சீர்திருத்தங்கள், போலி குடிநலன் திட்டங்கள் முதலானவை அதிகரிக்கப்பட்டு உள்ளன. சண்டை நடவடிக்கைகளில் துருப்புகளை இடம் மாற்றுவதற்கு விமானப் படையைப் பயன்படுத்தல், முன்னேறிய ஆளில்லா உளவு அறிதல் தொழில்நுட்பப் பயன்பாட்டில் அமெரிக்கா, இஸ்ரேல் ஆகியவற்றின் நெருக்கமான ஒத்துழைப்பைப் பெறுதல் ஆகியவை பச்சை வேட்டையின் மூன்றாம் சுற்றில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய அம்சங்கள் ஆகும். மத்திய, மாநில விரைவுப் படைகளில் புதிய அணிகளை உருவாக்குதல், அவற்றில் இப்போதுள்ள எண்ணிக்கையை மேலும் அதிகரித்தல், சண்டையிடும் திறனை அதிகரிக்கும் பொருட்டு ஆயுதப் படைகளை நவீனப்படுத்தல், குறிப்பாக எமது இயக்கம் உள்ள பகுதிகளில் தொடர்பு வசதிகளையும், உளவு வலைப்பின்னலையும் மேம்படுத்தல், போலி மோதல்கொலைகள், வன்கொடுமை, மக்கள் சொத்துகளைக் கொள்ளையிடுதல், கைதுகள், கைது செய்து துன்புறுத்தல், வன்புணர்வு செய்தல், இன்னும் பல கொடூரமான வடிவங்களில் ஒடுக்குதல் உள்ளிட்ட மக்கள் மீதான அட்டூழியங்களை அதிகரித்தல் ஆகியவை பெருமளவில் அதிகரிக்கப்பட்டுள்ளன. ஆனால், உளவியல் யுத்தத்தின் ஒரு பகுதியாக, இதற்கு முற்றிலும் மாறுபட்ட தோற்றம் ஊடகங்கள் வழியாக உருவாக்கப்பட்டு உள்ளது

பச்சை வேட்டை நடவடிக்கையின் மூன்றாம் சுற்றைப் பற்றிய புரிதலுடன் எமது பதில் செயல்பாடுகள் வலிமையடைய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. மத்திய, கிழக்கு இந்தியாவின் பழங்குடி மக்கள் நீண்ட மக்கள் யுத்த முன்னேற்றத்தில் வரலாற்று முக்கியத்துவமுள்ள பங்கை ஆற்றிக் கொண்டுள்ளனர். அவர்கள் பெரும் எண்ணிக்கையில் இயக்கத்திற்குள் இணைந்து, குருதியையும் வியர்வையும் சிந்தி இயக்கத்தைப் பாதுகாத்து, இயக்கத்தை விரிவுபடுத்துவதற்கான புதிய களங்களைத் தயாரிக்கின்றனர். புரட்சியை நிறைவேற்றுவதற்கு, மத்திய, கிழக்கு இந்தியாவின் பகுதிகள் வலிமையான புரட்சியின் கோட்டைகளாக எழுந்துள்ளன. இந்தக் கோட்டைகளை அழித்தொழிப்பதற்கு, பச்சை வேட்டையின் மூன்றாம் சுற்றை எதிரி முழுத்திறனுடன் வலிமைப்படுத்தியுள்ளான். கட்சி, படை, புதிய ஜனநாயக ஆட்சி அலகுகள் ஆகியவற்றை அழித்து, அந்த இடத்தில் முந்தைய நிலைமையை திரும்பவும் தோற்றுவித்து சீரழிந்த அரசியல் அமைப்பைப் பாதுகாப்பதற்காக ஒடுக்குமுறையை எண்ணிகை அளவு பண்பளவு ஆக மாற்றவதின் மூலம் எதிரி முயல்கிறான்.

மாவோயிச இயக்கத்தை ஒடுக்குவதற்கு நோக்கம் கொண்ட பழைய, புதிய ஒடுக்குமுறை வடிவங்கள் மூலமாக அவர்கள் மவோயிஸ்ட்களை மட்டுமே குறிவைக்கவில்லை. எல்லா ஒடுக்கப்பட்ட பிரிவினர் மீதும் மக்கள் மீதான போர் தொடுக்கப்பட்டுள்ளது. தொழிலாளர், உழவர், தலித்கள், பழங்குடிகள், மதச் சிறும்பான்மையினர், ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் போன்ற எல்லா சுரண்டப்படும் வர்க்கங்கள், சமூகப் பிரிவினர், குழுமங்கள் முதலானோர் மீதும் அரசியல்ரீதியாக, பொருளாதாரரீதியாக, பண்பாட்டளவில், நீதிமுறைரீதியாக, இராணுவரீதியாகத் தக்குதலுக்கு உள்ளாக்கப் படுகின்றனர். ஆகவே, போர்க்களம் பரந்து விரிந்து உள்ளது. மோடி அரசாங்கத்தின் பார்ப்பனிய இந்து பாசிசக் கருத்துநிலை, நாட்டை விற்கும் கொள்கைகள் ஆகியவற்றுடன் நடைமுறைக்கு வந்துள்ள எதிரியின் இந்தப் புதிய ஒடுக்குமுறையை அரசியல்ரீதியாகவும் இராணுவரீதியாகவும் நாங்கள் எதிர்கொண்டு உள்ளோம்.

மோடி, ராஜ்நாத் சிங், ஜெட்லி, வெங்கையா நாயுடு, கட்காரி, அல்லது தேஜகூ அரசாங்கத்தின் எந்தவொரு பிரதிநிதியாக இருந்தாலும் சரி அவர்கள் மக்களை முட்டாள்கள் ஆக்க முடியும் என்று

*எண்ணுகின்றனர், மக்களுக்கு முற்றிலும் விரோதமாகச் செயல்படுகின்றனர். மக்களுக்கு எதிராக எல்லா வகை ஒடுக்குமுறையும் நிறைவேற்றுவதற்கு அரசியலமைப்புச் சட்டத்தை மீறிய, நீதிமுறைகளை மீறிய கருவிகளைப் பயன்படுத்தும் ஆளும் வர்க்கமாக, பாசிச மோடி அரசாங்கத்தின் மக்களுக்கு எதிரான இயல்பு மென்மேலும் அம்பலப்பட்டு உள்ளது. ஒடுக்குமுறைச் சூழலால் பாதிக்கப்பட்டுள்ள எல்லா பிரிவினருடனும் ஒன்றுபடுவதன் மூலம் இந்தத் தாக்குதலை உறுதியோடு எதிர்த்துத் தோற்கடிக்க எம்மால் முடியும். மோடியின் எதிர்ப்புரட்சிக் கொள்கைகளையும், குறிப்பாகப் பச்சை வேட்டையின் மூன்றாம் சுற்றையும் எதிர்த்துச் சண்டையிடுவதற்காக, மக்களுக்கு ஆதரவான எல்லா ஜனநாயக, முற்போக்கு, மதச் சார்பற்ற, நாட்டுப்பற்றுக் கொண்ட சக்திகள் அனைவரையும் ஒன்றுதிரட்டும் வகையில் எமது கொள்கைகள் செயலுத்திகள் அமைந்துள்ளன. பாராளுமன்ற இடதுசாரிகள் மக்களுடைய பிரச்சினைகளைக் கையிலெடுத்து, எதிரியின் ஒடுக்குமுறை எதிர்த்து அவர்களின் சொந்த வழியில், பொருத்தமான முறைகளில் போராட முன்வருமாறு வலியுத்த வேண்டும். இந்தப் போராட்டத்தில் இணைவதற்கு முன்வர வேண்டும். எதிரியின் பல்முனைத் தாக்குதல் ஒடுக்குமுறையை எதிர்த்து எல்லாத் தளங்களிலும் போராடுவதற்கு எல்லாச் சக்திகளையும் அறைகூவி அழைக்கின்றோம்.*

*ஒன்றுபடுவோம் ! ஒன்றுபடுவோம் !*
*எதிரியின் ஒடுக்குமுறையை எதிர்த்து ஒன்றுபடுவோம் !*

*போராடுவோம் ! போராடுவோம் !*
*நமது பொதுஎதிரியை எதிர்த்துப் போராடும் !*

★★★